பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 22 06·07·94 புதன்கிழமை ஓசை 138

## அதிகரித்தகிருமிநாசினி பாவனையால் நுளம்புத் தொல்லை அதிகரிப்பு

அளவுக்கதிகமான கிருமிநாசினி பாவனை மலேரியாவையும் மூளைக் காய்ச்சலையும் கொண்டு வருகிறது என பேராசிரியர் சரத் பண்டார கூறுகிறார். பூச்சி புழுக்கள் அற்ற சிறந்த தரமான காய்கறிகளையும் தானியங்களையும் பெறுவதற்கு இங்குள்ள விவசாயிகள் விரும்புகின்றனர். இதற்காக அவர்கள் அளவுக்கு அதிகமான கிருமிநசினியைப் பயன்படுத்துகின்றனர். இதனால் நுளம்புகள் அதிகரிக்கின்றன. கிருமிநாசினிகளின் அதிகரித்த பாவனையால் கிருமிநாசினிக்கு எதிர்ப்புச் சக்தியை அனோபிலிஸ், கியூலெக்ஸ் நுளம்புகள் பெற்றுள்ளன. அதனால் இவ் இன நுளம்புகள் வயல்களிலும் தோட்டங்களிலும் பெருகி வருகின்றன. இதனால் மலேரியா மூளைக் காய்ச்சல் என் (6ஆம் பக்கம் பார்க்க)




நேற்று கொக்குவிலில் நடைபெற்ற கரும்புலிகள் நாள் அணிவகுப்பில் கலந்துகொண்ட போராளிகளின் 'பான்ட்' அணியை முதலாவது படத்திலும் கரும்புலிகளின் உருவப்படங்களையும் தீவர்த்திகளையும் ஏந்தியவாறு மாணவிகள் அணிவகுத்துச் செல்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்,

## கரும்புலிகள் நாள் வன்னியில் அனுஷ்டிப்பு

வன்னிப் பிரதேசத்தில் கரும்புலிகள் நாள் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. பெருமளவு மக்களும் போராளிகளும் இந் நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

முல்லை மாவட்டத்தில் கரும்புலிகள் நாள் மிகவும் எழுச்சியாக நடைபெற்றது. ஒவ்வொரு வட்டத்திலும் கரும்புலிகளை நினைவு கூர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் காலை 10 மணியளவில் நடைபெற்றது. இதில் பெருந்திரளான மாணவர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இத்தோடு முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் பூநகரி வெற்றிக்கு வலுச் சேர்த்த 13 கரும்புலிகளின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுச் சமாதிக்கு பிற்பகல் 1 மணியளவில் 'பான்ட்' வாத்திய இசையுடன் மக்கள் ஊர்வலமாக சென்று அஞ்சலி செலுத்தினர்.

இதில் கப்டன் கரிகாலன்(திருமலை) என்பவருடைய பெற்றோர் அவரின் சமாதிக்கு ஈகச் சுடரை ஏற்றி மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இதைத் தொடர்ந்து ஏனைய மாவீரர்களின் சமாதிகளுக்கு போராளிகள் ஈகச் சுடரை ஏற்றி மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இவர்களைத் தொடர்ந்து பெருந்திரளான மக்கள் இவற்றுக்கு அஞசலி செலுத்தியவண்ணம் இருந்தனர்.

(6 ஆம்' பக்கம் பார்க்க)

# வீர வரலாறு படைத்த கரும்புலிகளுக்கு தமிழீழ மக்கள் உணர்வுபூர்வ அஞ்சலி

## கரும்புலிகள் நாளை ஒட்டி பல்வேறு

## சிறிலங்கா ராணுவத்திற்கு

## நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்களின் விடிவிற்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்து வீரச்சாவடைந்த கரும்புலிகளை நினைவு கூரும் முகமாகவும் அவர்களுக்கு வீர அஞ்சலி செலுத்தும் முகமாகவும் நேற்று தமிழீழம் முழுவதும் கரும்புலிகள் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. காலை தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமாகிய கரும்புலிகள் நாள் நிகழ்வுகளில் கரும்புலிகளின் உருவப்படங்களுக்கு மக்களும் போராளிகளும் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

மாலை கோட்டரீதியாக பொதுக்கூட்டங்கள் கலை நிகழ்வுகள் என்பன இடம் பெற்றன.

காலை 8.30 மணிக்கு போராளிகளின் முகாம்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள், கூட்டுறவு அமைப்புகள், சனசமூக நிலையங்கள் என்பனவற்றில் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. அத்துடன் கரும்புலிகளின் உருவப் படங்களுக்கு பொதுமக்களும், போராளிகளும் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர். பாடசாலைகள் தோறும் கரும்புலிகள் நாளையொட்டி பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மேலும் யாழ். குடாநாட்டின் வீதிகள் அனைத்தும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன அலங்கார வளைவுகள், கரும்புலிகள் உருவப்படங்கள் வைக்கப்பட்ட அஞ்சலிப் பந்தல்கள் என்பன முக்கிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. பொது நிறுவனங்கள் முன்பாகவும், போராளிகள் பாசறைகள் முன்பாகவும் பந்தல்கள் அமைக்கப்பட்டு கரும்புலிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு அவற்றுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்ததுடன், அணையாத தீபம் ஏற்றப்பட்டிருந்தன. அத்துடன் இவற்றுக்கு மின் அலங்காரமும் செய்யப்பட்டிருந்தது.

பல இடங்களில் கரும்புலிகளின் தியாகத்தைப் பறைசாற்றும் வகையிலான வாசகங்கள் அடங்கிய பதாகைகள் வீதிகளின் இரு மருங்கிலும் கட்டப்பட்டிருந்தன. மேலும் கேந்திர இடங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் கரும்புலிகள் பாடலும் எழுச்சிப்பாடல்களும் ஒலிபரப்பப்பட்டன. மேலும் வீதிகளில் பயணம் செய்த மக்கள் கரும்புலிகள் நாள் பட்டிகளை அணிந்து காணப்பட்டனர். அத்துடன் பலபொதுமக்களும் போராளிகளும் கறுப்பு நிற உடையுடன் சென்று கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

## புதிதாக ஆயுதகொள்வனவு

(கொழும்பு)

சிறிலங்காவின் முப்படையினரும் புதிதாக ஆயுதக் கொள்வனவை ஆரம்பித்துள்ளதாக சண்டேலீடர் எனும் வாரப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. விமானப் படை நான்கு மில்லியன் ரூபாவுக்கு இரு லொக்ஹீட் ஹேர்குலீஸ் அல்லது இரு அன்ரனோவ் ஏ. என் 32 கனரக சரக்கு விமானங்களையும் மூன்று எம். ஐ 17 துருப்புகளை எடுத்துச் செல்லக் கூடிய ஹெலிகப்டர்களையும் மூன்று எம். ஐ 24 தாக்குதல் ஹெலிகப்டர்களையும் கொள்வனவு செய்யவுள்ளது

இராணுவம் 80 ரஷ்ய டாங்கிகளையும் 120 கவச வாகன துருப்புக் காவி வாகனங்களையும் கேட்டிருந்த போதிலும் இத் தொகை 20 டாங்கிகள் 60 கவச துருப்புகள் ஏற்றும் வாகனங்கள் என தற்போதுகுறைக்கப்பட்டுள்ளது. இதேசமயம் கடற்படை பூநகரியில் விடுதலைப் புலிகளிடம் இழநத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே தேர்தல் நடக்காவிடின் அரசியலமைப்பு நெருக்கடி ஏற்படும்

வடபகுதியில் திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்படாவிட்டால் சிறிலங்கா அரசியவில் ரசியலமைப்பு நெருக்கடி ஏற்படும் சாத்தியமுண்டு.

இவ்வாறு கொழும்பில் இருந்து வெளியாகும் சண்டேலீடர் பத்திரிகையில் எழுதப்பட்டுள்ள கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடபகுதியில் தேர்தல் நடத்தப்படாவிட்டால் பாராளுமன்றத்திற்கு தேசியப் பட்டியல் மூலம் தெரிவாகவிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பட்டியலை பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படும். அவ்வாறு ஏற்பட்டால் பாராளுமன்றத்தை சட்டப்படி கூட்டும் வாய்ப்பு ஏற்படாது. இதனால் காபந்து அமைச்சரவைக்கும், புதிதாக தெரிவாகும் பாராளுமன்றத்திற்கு இடையே பதவி அதிகார நிலையிலான முறுகல்ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கருப் புலிகளின் உருவப்படத்துடன் நடைபெற்ற தீவர்த்தி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

தாயக விடுதலைப் போராட்டத்துக்கு வேகமும் எழுச்சியும் ஊட்டி உலகமே வியக்கும் வகையில் சாதனைகளை படைத்த கரும்புலிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் தமது உணர்வு பூர்வமான அஞ்சலியைச் செலுத்தினர் பான்ட் இசை, தீவர்ததி ஊர்வலம் என்பவற்றுடன் கரும்புலிகளின் உருவப்படங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன-

### வலிகாமத்தில்

வலிகாமம் கோட்டத்தின் முக்கிய அஞ்சலி நிகழ்வு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது-

கரும்புலிகளின் உருவப்படங்களைத் தாங்கியவாறு கறுப்பு, வெள்ளைச் சீருடை அணிந்த பாலவர்கள் அணிவகுத்துச் செல்ல விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரின் பான்ட் வாத்தியங்கள் முழங்க பொது மக்கள் அணி அணியாகதிரண்டுமேற்படி மைதானத்துக்குள் நுழைந்தனர்- இவ் அணியுடன் தீவர்த்திகளைத் தாங்கியவாறும் மாணவர்களும் மக்களும் மைதானத்தை வந்தடைந்தனர்-

மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையொன்றில் கரும்புலிகளின் உருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன-

இப் படங்களுக்கு நேற்று மாலை 7- 05 மணியளவில் ஈகச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டும், மலர் மாலைகள் அணிவித்தும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து அஞ்சலி உரைகளும் அதைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெற்றது-

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் தொண்டமானுக்கு நினைவுக்கல் நாட்டல்

கடந்த 30-ம் திகதி அன்று முல்லைத்தீவு நெடுங்கேணியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரச்சாவடைந்த முல்லைத்தீவுக் கோட்ட துணைப் பொறுப்பாளர் மேஜர் தொண்டமான் / இந்திரன் அவரது வித்துடல் கிடைக்கப் பெறாமையினால் அவரது திருஉருவப்படம் இன்று அவரது இல்லத்திலிருந்து முற்பகல் 9.00 மணிக்கு பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் புத்தூர் மாவீரர் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## கிராமப்புறம் நோக்கி ஐ.தே.க. குண்டர்கள்

### எதிரணியினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் போது எதிர் கட்சி ஆதரவாளர் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் குண்டர்கள்தற்போதுகிராமப்புறங்களுச்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டீ.மு. ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தென் மாகாணசபை தேர்தலின்போது குண்டர்கள் தொடர்பாக மக்கள் நடந்து கொண்டது போன்று இத் தேர்தலின்போது நடந்து கொள்வார்கள் என தான் எதிர்பார்ப்பதாக அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வரும் தேர்தலில் மக்கள் முன் செல்லத் தயங்கும் ஐக்கிய தேசியக் கட்சி குண்டர்களின் பலத்தை முழுமையாக பாவித்து கட்சியை வெற்றியீட்ட செய்ய முயல்வதாகவும் இதற்கு மக்கள் மிகவும் தெளிவான விடையை தென் மாகாண சபையில் வழங்கியது போன்று வழங்குவார் எனவும் மேலும்தெரிவித்தார்.

★ வியாழனுடன் மோதும் ஷுமேக்கர்லெவி!!

★ நடக்கப் போவது என்ன-?

★ பூமியிலும் இம்மோதலால் எதிர்விளைவுகள் ஏற்படுமா?

★ அறிந்து கொள்ள ஆவலாய் உள்ளதா!!

இதோ!!உங்கள் ஆவலைப் பூர்த்தி செய்து கொள்ள வெளிவந்துள்ளது ஜுன்--ஜுலை மாத



# உலக உலா

★ புலனாய்வுத் தலைவரின் சாவு

★ வியாழனுடன் மோதும் ஷுமேக்கர் லெவி

★ ஜப்பானில் அரசியல் நிலநடுக்கம்

★ புத்தபிக்குவின் மதன லீலைகள்

★ அந்தரங்கங்கள் வெளிவருகின்றன

★ கனவுக்கன்னியின் வெற்றி

★ போர்க்கால நடவடிக்கைகள் அம்பலம்

★ ஒரு பிணத்தின் கதை

★ ருவாண்டாப் படுகொலைகள்

★ நாசாவில் ஒரு ருஷ்யன்

ஆகிய தேர்ந்தெடுத்த செய்திகளையும் அறிவியற் கட்டுரைகளையும் தன்னகத்தே கொண்டு சர்வதேச தரத்திற்கு நிகரான பளிச்சிடும்


## வரி விளம்பரம்


### தேவை

புரியாணி வகைகள் மற்றும் நூடில்ஸ், சுவீற்ஸ் வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும். சம்பளம் திறமைக்கேற்ப வழங்கப்படும். ஹொட்டல் றொலெக்ஸ், 340 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், (8719)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப் பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். சகலவிதமான மணிக்கூட்டு பற்றறிகளும், உதிரிப் பாகங்களும் விற்கப்படும். கஜன்ஸ் வாச் வேக்ஸ் 12, புகையிரத நிலைய வீதி சுண்ணாகம் சந்திக்கருகாமையில். (8670)


## சாரணியர்பாசறை

யாழ். மாவட்ட சாரணியர் பாசறை வாசம் கடந்த 24ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இரண்டு பிரிவுகளாக திருமதி கி. சிவராசா. திருமதி சி. தவமணிதாசன் ஆகியோர் பொறுப்பில் நடைபெற்ற இப்பாசறையில் 81 சாரணியர் பங்குபற்றினர்.

## நாடு திரும்பினார்

மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூருக்கு சென்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பியுள்ளார்.

இவரின் வருகையைத் தொடர்ந்து பாராளுமன்ற வேட்பாளர் தொடர்பாக இறுதி முடிவு ஓரிரு தினங்களில் மேற்கொள்ளப்படும் என தெரியவருகின்றது.


ஆட்டோ/ஸ்கூட்டர் திருத்த வேலைகளுக்கு/ சேவிஸ் செய்வதற்கு பதிவு செய்தல்

**விவசாயபீடம் - கிளிநொச்சி**

**பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்**

மேற்குறித்த வாகனங்கள் திருத்த, சேவிஸ் செய்வதற்கு கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து, தனித்தனியே விண்ணப்பங்கள், தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பெயர், முகவரி, முன்னைய அனுபவம் பற்றிய சகல விபரங்களையும் குறிப்பிட்டு நிதியாளர், யாழ்/ பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 20-07-1994க்கு முன்னர், விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்

(சி-9745)


உ

சிவமயம்

## அந்தியேட்டி அழைப்பு

பவ வருடம் வைகாசித் திங்கள் 23 ஆம் நாள் (06-06-1994) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரான

உயர்திரு

**வேலுப்பிள்ளை தில்லையம்பலம்**

(Retired Chief Revenue InsPector)

அவர்களின் அந்தியேட்டி வைபவம் ஆனித் திங்கள் 22ஆம் நாள் இன்று(06-07-1994)புதன்கிழமை காலை 6-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வணக்கம்.

இங்ஙனம்,

மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்

மற்றும்

பெறாமக்கள், மருமக்கள், மைத்துனிமார், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## நினைவு கூருகின்றோம்...

### 06. 07. 1994

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறை - மந்திகைப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். தியாகு** [புத்திசிகாமணி சித்திரவேல்- கும்புறுப்பிட்டி - திருமலை]

**மகான்** [சின்னத்தம்பி பஞ்சலிங்கம் - உடுத்துறை, தாளையடி - யாழ்]

அம்பாறை - செம்மணிக்குளம் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்,

1988ஆம் ஆண்டு மட்டு - கொக்கட்டிச்சோலைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

**காளி** (ஞானசேகரம் சின்னத்தம்பி - பழுகாமம் 01- பெரியபோரதீவு - மட்டு)

1989ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கிளிநொச்சி - பரந்தனைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**பிரதீபன்-உமா** (சுப்பையா சந்திரன் - இருபாலை, கோப்பாய் - யாழ்)

அம்பாறை - ஞ்சிகுடியாற்றுப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

கிண்ணியாப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் உயிருடன் ரயர்போட்டு எரிக்கப்பட்ட 06 தமிழர்கள்.

திருமலை - மூதூர்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 10 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் (தலைமன்னார்) பயணம் செய்து கொண்டிருக்கையில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது படகுடன் மூழ்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 09 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு திருமலை- சேருவில பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ராணுவத்தினர் துறைமுகம் பகுதியில் பொதுமக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின் போது சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன சின்னத்தம்பனையைச் சேர்ந்த தமிழிளைஞன்,

1992ஆம் ஆண்டு மட்டு - பெண்டுகள்சேனையில் எமது முகாமைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பவளமூர்த்தி-பிரகாஷ்** (கனகசுந்தரம் சுதா- பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை)

**ஜெயசுறி-யேசுசிறி** (தம்பிராசா இராசதுரை- கல் முனை - அம்பாறை)

சர்வதேச தரத்திற்கு நிகரான பளிச்சிடும்
அட்டைப் படத்துடன் வெளிவந்துள்ளது
ஜுன் - ஜுலை மாத

# உலக உலா

வாங்கிப் படியுங்கள்!! உலகை அறியுங்கள்!!
அறிவை வளருங்கள்!!!

★ சகல புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-9766)

## நெல்லியடியில்...

தமிழ்நிலா நகைமாடம் வழங்கும்
புதிய சேவை

## போட்டோ பிரதி (PHOTO STAT) சேவை

உங்கள் பிரதிகளை
பெரியதை சிறியதாக்கவும் சிறியதை பெரியதாக்கவும்
கறுப்பு, நீலம், சிவப்பு, பச்சை
ஆகிய நிறங்களில் பதிவாக்கிக் கொள்ள

## தமிழ்நிலா நகை மாடம்


பேருந்து நிலையம், நெல்லியடி,
கரவெட்டி.

(சி-9762)

பேரமக்கள், மருமக்கள், மைத்துனிமார்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தொண்டைமானாறு. (8715)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தவப்பேறு 05 — 11 — 1923

சிவப்பேறு 18 — 06 — 1993

ஊரெழு மேற்கைச் சேர்ந்த
ஆசிரியரும் பிரபல சமூகத் தொண்டரும்
தியாகி திலீபனின் தந்தையும்
ஆகிய

### அமரர் திரு. நாகலிங்கன் இராசையா

அன்பின் சோதியே பாசத்தின் பிறப்பிடமே
உங்கள் ஆசை முகம் மறைந்து
ஆண்டு ஒன்று போனாலும் இன்பமாய்
நாம் வாழ்ந்த காலத்தை நினைத்து
மறக்க முடியாமல் தவிக்கின்றோம்
எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டியாய்
நின்று இறுதிவரை எம்மை காத்துநின்ற
எங்கள் தெய்வமே! நீங்கள் எம்மைவிட்டு
பிரிந்து சென்றாலும் உங்கள்
நினைவு என்றும் எம் நெஞ்சைவிட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய
வாழ்நாள் முழுவதும் துயருடன் பிரார்த்திக்கும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்.

தகவல்;
இ. நம்பி
(மகன்)

திலீபன் வீதி,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(8726)

முனை - அம்பாறை)
**தட்சணாமூர்த்தி** (முருகையாப்பிள்ளை தர்மலிங்கம் - காரைதீவு - அம்பாறை)
**தேவானந்தன்** (சங்கரன் மாதவன்- அம்பாறை)
**கப்டன் ரமணி** (தம்பிமுத்து நாகேந்திரம்-கிண்ணியடி, வாழைச்சேனை - மட்டு)
**லெப். சொரூபசீலன்-விஜயன்** (காத்தமுத்து தவராஜா - மாவடிவேம்பு, சித்தாண்-மட்டு)
**2-ம் லெப். சிறீகாந்தலிங்கம்** (சேதுகாவல்பிள்ளை சத்திவடிவேல் - எருவில்-மட்டு)
**குகநேசன்-டிகோ** (தங்கராசா காராளசிங்கம்-அம்பிளாந்துறை-மட்டு)
**காந்தன்-கந்தன்-சேதுராஜா** (தம்பிராசா கண்ணன் - கிரான் - மட்டு)
**ராஜன்-நாதன்** (குமாரசாமி கலைச்செல்வன்-கிரான்குளம்-மட்டு)
**புவி-வேணுகோபால்** (தங்கராஜா சந்திரன்-மண்டூர் - மட்டு)
**தயான்-சக்திவேல்** (முத்துவேல் மோகன் பொருவில், மன்னம்பிட்டி - பொலநறுவை)
**உமைகுமார்-முகுந்தன்** (கணபதி கதிர்காமலிங்கம் - பதுளை - மலையகம்)

யாழ் - பலாலிப்பகுதியில் எதிர்பாராதவிதமாக மிதிவெடி வெடித்ததில் வீரச்சாவெய்திய-
**2-ம் லெப். கலையரசன்-றொபின்சன்**
அரிகரிதாசன் டொரிக்நோத் - கற்கோவளம், பருத்தித்துறை)

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காடையர்கள், இராணுவத் தாக்குதல்களுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து காட்டோரக் கிராமங்களில் தங்கியிருந்தவர்களில் சிறிலங்கா இராணுவம் சுட்டுக்கொலை செய்த 18 தமிழர்கள்.

1993ஆம் ஆண்டு திருமலை - நிலாவெளிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,
**மேஜர் முகிலன்** (பொன்னுத்துரை நவரட்ணராஜா அன்புவழிபுரம் - திருமலை)-
**கப்டன் முத்தமிழரசு-விஜயன்** (சிவலிங்கம் கமலதாஸ்- 12-ம் வட்டாரம்-திருமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9755)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

# குவைத்தில் பலியானோர் குடும்பங்களுக்கு நட்டஈடு

(கொழும்பு)

வளைகுடா யுத்தத்தில் கொல்லப்பட்ட அல்லது காயப்பட்ட இலங்கையர்களின் குடும்பங்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகத்தில் இடம்பெற்ற எளிமையான வைபவமொன்றில் கொல்லப்பட்ட அல்லது காயமுற்ற இலங்கைத் தொழிலாளர்களில் தங்கியிருக்கும் குடும்பத்தினருக்கு இந் நட்டஈட்டுக்கான காசோலையை அமைச்சர் எம். எச். எம். அபுசாலி வழங்கியுள்ளார்.

வளைகுடா யுத்தத்தின் போது அங்கு தொழில்வாய்ப்பு பெற்றிருந்த 18 இலங்கையர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் 18 இலங்கையர்கள் காயமுற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொலையுண்ட ஒவ்வொருவருக்கும் தலா பத்தாயிரம் அமெரிக்க டாலர் பெறுமதியான (சுமார் ஐந்து லட்சம் ரூபா) காசோலைகளும், காயமுற்றவர்களுக்காக தலா 2500 அமெரிக்க டாலர் பெறுமதியான (சுமார் 1,25,000 ரூபா) காசோலைகளும் வழங்கப்பட்டன.

# ராஜாங்க அமைச்சர்களுக்கு தொடர்ந்தும் சலுகை

(கொழும்பு)

கருத்திட்ட அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்கள் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பும் அதே சலுகைகளை தொடர்ந்தும் அனுபவித்து வருவதாக எதிர் கட்சிகள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடம் புகார் செய்துள்ளன. இது அரசியலமைப்புக்கு முரணானது எனவும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

இவர்கள் பொது வைபவங்களில் பங்குபற்றும் போது அதே அடைமொழிகளால் அழைக்கப்படுவதாகவும், தமது உத்தியோகபூர்வ அந்தஸ்தை தொடர்ந்து பயன்படுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது இது அரசியலமைப்புக்கு முரணானது எனவும் எதிர்க்கட்சி வட்டாரங்கள் ஜனாதிபதியிடம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

# கட்சிக்குள் கழுத்தறுப்பு வேலை வேண்டாம்

## கேணல் அநுருத்த ரத்வத்தை

(கொழும்பு)

விருப்பு வாக்குகளைக் கூடுதலாகப் பெற வேண்டும் என்பதற்காக கட்சிக்குள் கழுத்தறுப்பு வேலைகளில் எவரும் ஈடுபடக்கூடாது எனவும் கட்சிக்கு அதிகமான வாக்குகளைப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் கடினமாக உழைக்க வேண்டும் எனவும் சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கேணல் அநுருத்த ரத்வத்தை கூறியுள்ளார்.

கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், கட்சிக்கு அதிகமான வாக்குகள் கிடைக்கும் போதுதான் அதிகளவில் கட்சி வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படலாம் என்பதை ஆதரவாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த தேர்தலில் ஐ தே. க. சார்பில் 5000 விருப்பு வாக்குகள் பெற்றவர் கூட தெரிவு செய்யப்பட்ட நிலையில் 12,000க்கும் அதிகமான விருப்பு வாக்குகள் பெற்ற சுதந்திரக் கட்சியினர் விடப்பட நேர்ந்ததையும் சுட்டிக்காட்டினார்.

# சபைகலரியில்இருந்தவர்மீது நகரசபை உறுப்பினர்தாக்கு

(கொழும்பு)

தெகிவளை-மவுண்ட் லேவனியா நகரசபை உறுப்பினர் ஒருவர் சபை நடவடிக்கைகளைச் சபை கலரியிலிருந்து பார்வையிட்டுக் கொண்டிருந்த ஒருவரைத் தாக்கியதா...

உறுப்பினரான சி. வி. குணரத்னா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

சபை உறுப்பினர் ஒருவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றின் மீதான...

# சுதந்திரத் தமிழீழத் தாயகத்தில் சீதனக்கொடுமை இருக்காது

(தொல்புரம்)

''எமது சுதந்திர தாயகமான தமிழீழத்தை முழுமையாக மலரவைக்கும் போது, இந்த மண்ணிலே சீதனக்கொடுமைகள், முறைகேடுகள் இல்லாதொழிய வேண்டும். எந்த ஒரு பிரசையும் சீதனம் என்கின்ற மாயையில் சிக்கி அல்லல் உறுவதை தவிர்த்து, நல்ல சமுதாயத்தை உருவாக்கி இப்படியான கொடுமைகளின்றி வாழ மக்களாகிய நீங்கள் தான் ஒத்துழைப்பினை நல்க வேண்டும்.''

இவ்வாறு தொல்புரம் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் சங்கானை வட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு. ந. மதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற சீதன ஒழிப்பு பிரசார கருத்தரங்கில் யாழ் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. சி.எழிலன் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றும்போது சீதனம் என்பது மிகவும் சிக்கலான சமூகப்பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. முன்னைய காலங்களில் திருமணத்தின் போது பெண்ணுக்கு அவரது பெற்றார் தாய்வழிச் சொத்தாக வழங்கும் உடைமைகள் சீதனம் என வழங்கப்பட்டது. ஆனால் இன்று அந்த முறை மாறி மணப்பெண்ணுக்கு மட்டுமின்றி மணமகனுக்கும் அவனின் குடும்பத்தாருக்கும் பல்வேறு முறைகளில் பணமாகவும், சொத்துக்களாகவும் பரிமாறும் முறையாக சீதனக் கொடுப்பனவுகள் மாறியுள்ளன.

எமது தேசத்தை பொறுத்தவரை சீதனப்பிரச்சினையானது பெண்களின் திருமண வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய காரணியாக அமைந்து விட்டதுமல்லாமல், பொருளும், நகையும், பணமும் ஒரு பெண்ணின் திருமண வாழ்வை தீர்மானிக்கும் மிகப்பெரிய சக்திபாக வளர்ந்துள்ளது.

இந்த சீதனக்கொடுமையின் தாக்கமானது திருமணத்திற்கு முன்பும் சரி, பின்பும் சரி பெண் இனத்தை பலவகையிலும் கடுமையாக பாதித்து வருவதோடு. ஆண்களையும் பாதிக்கும் நிலையை ஏற்படுத்துகின்றது. பல பெண் சகோதரங்களுடன் பிறந்த ஆண் ஒருவர் தனது சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைக்க சீதன வசதி இல்லாத நிலையில் அவர்களுக்காக தன்னை அர்ப்பணித்து காலம் பூராவும் உழைத்து போட வேண்டிய நிலைக்கு ஆளாகி தனது ஆசைகள் அபிலாசைகளை விட்டெறிந்து இல்லற வாழ்வையே வெறுக்கின்ற நிலைக்கு அந்த ஆண் ஆளாகுகின்ற அவலநிலை ஏற்படுகின்றது.

நடந்தவற்றையும், வரலாற்றையும் விடுதலைப் புலிகளாகிய நாம் புரட்டிப்பார்க்கின்றவர்கள். எமது சுதந்திர பூமி மலர்ந்தபின் இங்குள்ள பெண்கள் சீதனம் என்ற கொடுமையை எதிர்நோக்க நாம் இடம் அளிக்கமாட்டோம். சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஒத்து வராத இந்த பிற்போக்குத்தனமான பிரச்சினையை இல்லாதொழிப்பதில் நாம் உறுதியான கொள்கையுடன் நிற்கின்றோம். இங்குள்ள மக்களின் முழுமையான ஒத்துழைப்புடனும், பங்களிப்புடனும் அவர்கள் தெரிவிக்கும் அபிப்பிராயங்களுடனும், கருத்துக்களுடனுமே இந்தசீதனப் பேயை எமது சமுதாயத்திலிருந்து விரட்டியடிக்க முடியும். எனவே இந்த அரும்பெரும் முயற்சியினை நாம் வென்றெடுப்பதற்கு பொதுமக்களாகிய உங்களது ஆதரவையும், கருத்துக்களையும் வேண்டி நிற்கின்றோம் என தெரிவித்து, அங்கு கூடியிருந்த மக்களின் கருத்துக்களையும் கேட்டு அறிந்து கொண்டார். நிகழ்வில் மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி பொன்னிலாவும் உரையாற்றினார். இறுதியில் வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது. (41)

# எதிரணியுடன் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டி

## — வாசுதேவ அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல்களின்போது நவசமசமாஜக்கட்சி பொதுசன முன்னணியுடன் இணைந்து போட்டியிட இருப்பதாகவும், பொதுசன முன்னணியின் சின்னத்தின் கீழ் தமது உறுப்பினர்கள் போட்டியிட இருப்பதாகவும் இக்கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

லண்டன் பி.பி. சியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் இவ்வாறு பொதுசன முன்னணியுடன் இணைந்து கொள்வதால் சில வேளைகளில் கட்சி பிளவு ஒன்றைச் சந்திக்க நேரலாம். ஆனால் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிரான வாக்குகளை...

...காகவே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் கட்சியின் பொதுச் சபையை கூட்டியே இத்தகைய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். ஆனால் திடீரென ஏற்பட்ட தேர்தலுக்கு முகம்கொடுக்க வேண்டிய அவசியத்தில் பொதுசபையைக்கூட்டி தீர்மானம்எடுத்து அதனை நடைமுறைப்படுத்த முன்னர் தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்வதற்கான திகதிகூட முடிந்துவிடலாம் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை வாசுதேவ நாணயக்கார பொதுசன முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதாக எடுத்த முடிவு அவரின் தனிப்பட்ட முடிவே... சமாஜக் கட்சியின் தலைமைக் காரியாலய வட்டாரங்கள் கூறியுள்ளன.

அத்துடன் கட்சியின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே முடிவெடுக்க வேண்டும் எனவும், தனியாக வாசுதேவ நாணயக்கார மட்டும் தீர்மானித்துவிட முடியாது எனவும் கட்சி வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

மேலும் முதலாளித்துவ கொள்கைகளை உடைய கட்சிகளுடனோ அல்லது திறந்த பொருளாதாரக் கொள்கையுடைய கட்சிகளுடனோ கூட்டுச் சேரும் எண்ணம் கட்சிக்கு கிடையாது எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

# தேர்தலுக்குநிதி உதவுவதில் கோடீஸ்வரர்கள் தீவிரம்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் தேவையான பல கோடிக்கணக்கான பணத்தை வழங்க பல வர்த்தகப் புள்ளிகள் முன்வந்துள்ளதாக கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறான கோடீஸ்வரர்கள் சிலர் இரு கட்சிகளுக்கும் பணத்தை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். இதே வேளை ஐ. தே. க. தேர்தல் தொடர்பாக கிடைக்கும் நிதி அபேட்சகர்களுக்குத் தேர்தல் தொகுதி அடிப்படையில் பங்கிட்டு வழங்கப்படும் என ஐ. தே. க. முன்னாள் பொருளாளர் எல். ஜீ. பி. பண்டிதரட்ண தெரிவித்துள்ளார்.

பண்டிதரட்ண ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசேடகமிட்டியின் கீழ்கடமையாற்றுவதாகவும், இக்கமிட்டியில் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரம வீரசூரியா, ஜனாதிபதியின் செயலாளர் சரத் அமுனுகம, ஐ. தே. க. செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா, டாக்டர் ஜயலத் ஜயவர்தன ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் ஐ. தே. க. போட்டியிட மாட்டாது

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ. தே. க. யாழ்ப்பாணத்தில் போட்டியிடமாட்டாது என அறிவித்துள்ளது. அப்பகுதியில் காணப்படும் நிலைமை காரணமாக அங்கு பிரசாரங்களை மேற்கொள்ள முடியாது. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தினுள்ளேயே புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி மாவட்டமும் உள்ளது. யாழ் மாவட்டத்தில் குறுகிய பகுதியே அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனால் அங்கு போட்டியிட முடியாத நிலை இருப்பதாக ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவிப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் தேர்தலை நடத்த வேண்டாம் என சகல எதிர்க்கட்சிகளும் கோரியதையடுத்தே ஐ. தே. க. வும் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்ததாக அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# கொத்தலாவலையின் களவு வீடியோ படமாக காண்பிப்பு

முன்னாள் இராணுவ அதிகாரி லெப். கேணல் கொத்தலாவலையினால் தொடுக்கப்பட்ட மனித உரிமை மீறல் வழக்கை மேற்கொண்டு தொடர்ந்து நடத்த முடியாது என மூன்று உயர் நீதியரசர்கள் அடங்கிய குழு தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்காவில் இராணுவக் கல்லூரி ஒன்றில் பயின்று கொண்டிருந்த போது இவர் களவு ஒன்றில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு பின்னர் பதவிநீக்கம் செய்யப்பட்டார். இதை எதிர்த்து இவர் உயர் நீதிமன்றில் மனு ஒன்றை சமர்ப்பித்திருந்தார். விசாரணையின் போது இவர் திருட்டில் சம்பந்தப்பட்ட தினதத்தன்று குறிப்பிட்ட அந் அமெரிக்க வர்த்தக நிலையத்தில் கண்காணிப்பு கமராவினால் பதிவு செய்யப்பட்ட 32நிமிட வீடியோ படம் நீதியரசர்களுக்கு போட்டுக்காண்பிக்கப்பட்டது. அதில்கொத்தலாவலை ஓர்உடையைஎடுத்து மறைத்து வைத்ததும் அதை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கவனிப்பதும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதை பார்த்த நீதியரசர்கள் லெப்.கேணல்கொத்தலாவலை நீதிமன்றத்தைதவறாக நடத்த முற்பட்டுள்ளார் என்றும், இக் குற்றச் செயல் பொதுமக்கள் பார்க்கும் வகையில் பகிரங்கமாக காட்டப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# தேர் உற்சவம்

ஆனைக்கோட்டை மூத்த...

ந்த ஒருவரைத் தாக்கியதாசவும், தாக்கிய அவ் உறுப்பினர் பொலிசாரால் கைது செய்யப்படவில்லை எனவும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற

தீர்மானம் ஒன்றின் மீதான விவாதம் நடக்க நகர மேயர் அனுமதிமறுத்ததைத் தொடர்ந்து எழுந்த வாக்குவாதத்தின் போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# தேர்தல் பாதுகாப்பில் 30,000 பொலிசார்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களின் போது பாதுகாப்புக் கடமைகளுக்காக மட்டும் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பொலிசார் ஈடுபடுத்தபபடவுள்ளனர். நடமாடும் ரோந்துப் பணிகள், வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பு மற்றும் குண்டர் குழுக்களைக் கட்டுப்படுத்துவது என்பன உட்பட தேர்தல் தொடர்பாக பல்வேறு பணிகளிலும் இவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இது தவிர மேலதிகமாக 10,000பேர் மற்றைய வழமையான கடமைகளுக்காக தேவைப்படுகின்றனர் இவ்வாறு பொலிஸ் மா அதிபர் பிராங் டி. சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தற்போது கனடா சென்றிருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஐ. ரி. கனகரத்தினம் தேர்தலுக்கு முன்பாக நாடு திரும்பி தேர்தல் பணிகளுக்காக பொறுப்பாக இருப்பார் எனவும் குறிப்பிட்டார். மற்றும் ஆயுதப் படையினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் தேர்தல் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் முப்படை அதிகாரிகள் மட்டத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். இதற்கு முன்பு எந்தத் தேர்தலின் போதும் மேற்கொள்ளப்பட்டிருக்காத அளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமானதாகவும். சடுமையானதாகவும் இருக்கும் எனக் கூறப்படுகிறது.

# ஐ. தே. க.வுடன் இணைந்து ஐ. ஐ. மு. போட்டி

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன இணைந்து போட்டியிடும் என கட்சியின் வட மேல் மாகாண சபையின் முதலமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

இவ்வித கூட்டு குறித்து நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட்டதாகவும், இதன்படி மாவட்ட அடிப்படையில் தமது கட்சி அபேட்சகர்களை நிறுத்தும் எனவும் இதற்கமையவே இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் தனது வேட்பாளர் யானைச் சின்னத்திற்கு வாக்களித்த பின் விருப்பு வாக்கை தனது கட்சி உறுப்பினர் இலக்கத்திற்கு இடுமாறும் அவர் கேட்டுள்ளார்.

சிக்கு எதிரான வாக்குகளை ஒன்றிணைத்து அரசாங்கத்திற்கு ஒரு பெரிய சவாலாக அமையவேண்டும் என்பதற்

அவரின் தனிப்பட்ட முடிவே என்றும் கட்சியின் தீர்மானமாக யாரும் அதனைக்கொள்ளக்கூடாது என்றும் நவசம

# காயம் விளைவித்தவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது

(தென்மராட்சி)

அரசன் நகர் பளையைச் சேர்ந்த நபர் ஒருவர் அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவருக்கு தடியால் அடித்து காயம் விளைவித்தார் என்ற குற்றத்திற்கு எதிராக பளைக் காவல்துறையினரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதியாளர் திரு. மயூரன் அவர்களால் விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கு முடிவில் எதிராளி குற்றவாளி என காணப்பட்டதுடன் அபராதமாக 1200 ரூபா கட்டும்படியும் பாதிக்கப்பட்டவருக்கு ரூபா 6000 இழப்பீடாக செலுத்துமாறும் பணம் கட்டத்தவறின் 285நாள் சிறைத் தண்டனை எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

★

(தென்மராட்சி)

கைதடியைச் சேர்ந்த ஒருவருக்கு காயம் விளைவித்த குற்றத்திற்காக தச்சன் தோப்பு பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு தொடர்பாக எதிராளி குற்றத்தினை ஒப்புக் கொண்டார்.

இதன் பிரகாரம் அபராதமாக 1000 ரூபாவும், பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடாக ரூபா 3000 மும் செலுத்துவதுடன் 15 நாட்கள் கட்டாய சிறை எனவும் திரு. மயூரன் தீர்ப்பளித்தார்.

(தென்மராட்சி)

வரணியைச் சேர்ந்த நபர் ஒருவர் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வெட்டிக் காயம் விளைவித்த குற்றத்திற்காக சாவகச்சேரி காவல் துறையினர் சாவகச்சேரி நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில்குற்றவாளி என ஒப்புக் கொண்ட எதிராளிக்கு மாவட்ட நீதியாளர் திரு மயூரன் அவர்கள் ரூபா ஆயிரம்(1000) அபராதமும் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடாக 5000 ரூபா செலுத்துமாறும் பணம் செலுத்தத்தவறின் 240 நாட்கள் சிறைத்தண்டனை எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

★

(தென்மராட்சி)

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ஒருவர் தனது சகோதரிக்கு பொல்லால் அடித்து காயம் விளைவித்ததற்கு தண்டனையாக 1000 ரூபாவும் இழப்பீடாக 2000 ரூபாவும் மன்றுக்கு கட்டினார்.

மேற்படி நபர் தனது சகோதரிக்கு பொல்லால் அடித்து காயம் விளைவித்தார் என்ற குற்றச் சாட்டு தொடர்பாக சாவகச்சேரி காவல் துறையினர் சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கில் குற்றவாளி குற்றத்தினை ஒப்புக் கொண்டதன் பிரகாரம் மேற்படி குற்றப்பணம் அறவிட்டு நீதியாளர் திரு மயூரன் தீர்ப்பளித்தார்.

(86)

தன.

அமெரிக்க வர்த்தக நிலை

# தனியார் மருத்துவக்கல்லூரி மாணவரை சேர்க்க முடிவு

வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியின் மருத்துவ மாணவர்களை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துடன் இணைத்துக் கொள்வது சம்பந்தமான தீர்மானம் ஒன்றை மருத்துவபீட சபை நிறைவேற்றியுள்ளது

இத்தீர்மானத்தின்படி மேற்படி தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை பல்கலைக்கழக மருத்துவப்பீடத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் இவ்வாறு இணைத்துக் கொண்டால் அவர்களுக்கு மருத்துவக்கல்வியை வழங்க முடியும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேற்படி மாணவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தையே மருத்துவப்பீட சபையில் உள்ளவர்கள் கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. எனினும் மேற்படி தனியார் மருத்துவக்கல்லூரி மாணவர்களை மருத்துவப்பீடத்துடன் இணைத்துக் கொள்ளும் போது மருத்துவப் பீட மாணவர்களது அனுசரணையையும் பெற்றுக் கொள்வது அவசியம் என்றும் மேற்படி தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மேற்படி விவகாரம் குறித்து பல்கலைக்கழக மூதவை மருத்துவப்பீட சபையிடம் ஆலோசனை கூறும்படி கேட்டுக்கொண்டதற்கு அமையவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் நடைபெற்ற மருத்துவப்பீட சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட இத்தீர்மானத்தை நேற்று நடைபெற்ற மருத்துவப்பீட சபைக் கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் குறித்து மூதவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. மூதவை இவ்விவகாரத்தை ஆராய்ந்த பின்னர் இறுதி முடிவு எடுக்க இருக்கிறது. (க)

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்தின் வருடாந்த தேர் உற்சவம் நாளை நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் நாளைமறுதினமும் திருக்கல்யாண உற்சவம் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இவ் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 24 ம் திகதி ஆரம்பமாகியிருப்பது தெரிந்ததே.


## வெற்றிக்கிண்ணம்யாருக்கு

'94 உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறப் போகும் அணிகளை வரிசைக் கிரமமாகத் தெரிவு செய்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். விண்ணப்பங்கள் பிரசுரமாகியுள்ள விண்ணப்பப்படிவத்தில் அனுப்பப்பட வேண்டும். பரிசு பெறுவோர் குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்படுவர்.

முதலாம் பரிசு 500 ரூபா
இரண்டாம் பரிசு 300 ரூபா
மூன்றாம் பரிசு 200 ரூபா

9-7-94 அன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் தபால் மூலமோ அல்லது நேரிலோ கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

முகவரி;
உலகக்கிண்ண உதைபந்தாட்டம் '94
ஈழநாதம் காரியாலயம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

வெற்றிக் கிண்ணம் யாருக்கு?
உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி '94

1-ம் இடம்: ....................
2-ம் இடம்: ....................
3-ம் இடம்: ....................

பெயர்: ....................
விலாசம்: ....................
கையொப்பம்: ....................

# தலைவர்களின் கொலை சந்தேகத்தை தருகிறது

## சந்திரிகா குமாரணதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தலைவர்கள் பலர் கொல்லப்பட்ட விதம் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவை தொடர்பாக விசாரணை நடத்த ஆணைக்குழு நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் பலமுறை கோரியும் பலன் எதுவும் கிட்டவில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவியின் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெற்றிருந்த சில திட்டங்களைத் திருட்டுத்தனமாகப் பெற்றுக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அதனைத் தனது திட்டங்களாகக் கூறி வருகிறது. இது ஒரு அரசியல் கட்சிக்கு அழகானதல்ல என மேலும் அவர் தெரிவித்தார்.

# புலிகளுடன் பேசாமல் பிரச்சினைக்குத் தீர்வில்லை

## எம். எச். முகமட் தெரிவிப்பு

(கொழும்பு)


விடுதலைப் புலிகளுடன் பேசாமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு இல்லை என ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முன்னாள் சபாநாயகர் எம். எச். முகமட் தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் பேசாது பொதுத் தேர்தலை நோக்கமாக வைத்து தமிழ் மக்கள் பிரச்சினை சம்பந்தமாக முன் வைக்கப்படும் தீர்வு பயனற்றதாகும். நான் சபாநாயகராக விடுதலைப் புலிகளை சந்திக்க பல முறை விரும்பினேன் அது பல்வேறுகாரணங்களால்ஒத்தி வைக்கப்பட்டது. என்னை வரவேற்க புலிகள் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். என் பயணத்தின் அடையாளமாக ஆறு பொலிசாரை விடுவிக்கவும் அவர்கள் தயாராக இருந்தனர். எமது இதயத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பதை இது காட்டுகிறது நான் எனது சபாநாயகர் பதவியை கூட இராஜினாமா செய்து விட்டு யாழ்ப்பாணம் செல்லத் தயாராக இருந்தேன். ஆனால் என் பயணத்தை ஒத்திவைக்குப்படி ஜனாதிபதி ஆலோசனை கூறினார்.

சில தமிழ் அரசியற் கட்சித் தலைவர்களை விடுதலைப் புலிகள் நம்பவில்லை. அவர்கள தமிழர்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கவில்லை எனவும் தமிழர்களின் நம்பிக்கைகளுக்கு துரோகம் செய்துவிட்டனர் எனவும் விடுதலைப் புலிகள் கருதுகின்றனர். விடுதலைப் புலிகளின் பங்களிப்பின்றி ஏனையோருடன் முன் வைக்கப்படும் எந்த யோசனையும் பயனற்றவையாகும்.

விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தை மேசைக்கு அழைக்காமல் முன் வைக்கப்படும் எத் தீர்மானமும் எப்பயனும் தராது என்பது திண்ணம் எனவும் எம். எச். முகமட் தனது பேட்டியின் போது மேலும் தெரிவித்தார்.

# 7-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
04-11-1967

தாயக மண்ணில்
06-7-1987

**வீரவேங்கை மகான்**
(சின்னத்தம்பி பஞ்சலிங்கம்)
(உடுத்துறை)

**இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

தற்போதைய முகவரி:
நாகர் கோவில் கிழக்கு,

அன்புடன் குடும்பத்தினர்.
(8722)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
19-08-1950

மறைவு
06-06-1994

## யாழ். பல்கலைக்கழகம் மகாபொலக் கொடுப்பனவு

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான 5ம் தவணைப்பணம் 06.07.94 முதல் யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகையில் போடப்பட்டுள்ளது.

(சி 9761) பதிவாளர்.

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை.

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி - 1993/94

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம், ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க /அரச கூட்டுத்தாபனப் / தனியார்

தன் மூலம் அல்லது பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- க்கான காசுக்கட்டளையுடன் சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ. × 10 செ. மீ அளவினதான கடித மேலுறையுடன் உதவிப்பதிவாளர் / தேர்வுகளும் அனுமதிகளும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித்திகதி - 30.07.1994. பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத் தேர்வு மூலமாகவும், நேர்முகத் தேர்வு

## யாழ்ப்பாண மாநகரசபை

# பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் தற்காலிக பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொருத்தமான அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை, ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 15-07-1994ஆந் திகதி, வெள்ளிக்கிழமைக்குப் பிந்தாமல் பதிவுத்தபால் மூலம் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பத்துடன், பிறப்புச் சான்றிதழ், கல்வி/அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

ஒன்றுக் மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தனித்தனியாக பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

### பொதுவான தகைமைகள்

1. விண்ணப்பதாரர், மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2 18 வயதுக்கும், 40 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த உடல் ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

### பதவிகள்

**1. சந்தை மேற்பார்வையாளர் பதவி: (தற்காலிகம்)**

அ. க.பொ.த சாதாரண பரீட்சையில் தமிழ், கணிதம், சுகாதாரம் / விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ஆ. தொழில்நுட்பச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**2. பாதுகாப்புக் காவலாளிகள் பதவி: (தற்காலிகம்)**

அ. க.பொ.த. சாதாரண பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**3. லொறிச்சாரதி பதவி: (தற்காலிகம்)**

அ. 8-ம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ஆ. லொறி செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்று, குறைந்தது மூன்று வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**4. உருளை இயக்குநர் பதவி: (தற்காலிகம்)**

அ. 8-ம் வகுப்பில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
ஆ உருளை இயக்குநர் அனுமதிப்பத்திரம் பெற்று, உருளை இயக்குவதில் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**5. மருந்தரைக்கும் தொழிலாளர் பதவி: (தற்காலிகம்)**

அ. 5-ம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ஆ. சித்தவைத்தியரிடம் குறைந்தது 3 வருடங்கள் பணிபுரிந்த அனுபவம் வேண்டும்.

**6. பொது சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவி: (தற்காலிகம்)**

அ. 5-ம் வகுப்பில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்
1994-07-01

**வே. பொ. பாலசிங்கம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-9760)

# கேள்வி அறிவித்தல்



06-06-1994

## மகேந்திரம் இராஜேஸ்வரி

(இராசம்)

எம் இதயத்திலும் இல்லத்திலும் என்றும்
குடிகொண்டிருந்த எம் இதயதெய்வமே
இன்றோடு ஒருமாதம் ஓடிவிட்டது.
எத்தனை மாதங்கள் ஓடி மறைந்தாலும்
உங்கள் அன்புமுகமும் - நினைவுகளும்
என்றும் எங்களை விட்டு அழியாதம்மா.

உங்கள் பிரிவால் வாடும்

மகேந்திரம்
ஓடக்கரை ஒழுங்கை,
பருத்தித்துறை. (8718)

சணவன், பிள்ளைகள்,
சகோதரர், சகோதரி.
உறவினர்.

---

கல்வித்தகைமையும் கொண்ட அரசாங்க /அரச கூட்டுத்தாபனம் | தனியார் நிறுவனங்களில் அல்லது சுயதொழில் (விவசாயம், மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறிச்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் ரூபா 20/- செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை நேரில் சமர்ப்பிப்பயிற் பங்குபற்றுவோர் எழுத்துத் தேர்வு மூலமாகவும், நேர்முகத் தேர்வு மூலமாகவும் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்துத் கேர்வு 27.08.1994 சனிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு நடைபெறும்.

குறிப்பு:- பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்

(சி-9744)

---

### யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை நடாத்தும்

## 1994 சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா - போட்டி விபரம்

### பாடசாலை மாணவர்களுக்கான போட்டி

| திகதி | விபரம் | போட்டி | இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 09 - 07 - 1994 | ஆரம்பபிரிவு, கீழ்பிரிவு, மத்தியபிரிவு | கட்டுரை | யாழ். மத்திய கல்லூரி | காலை 9 மணி |
| 09 - 07 - 1994 | ஆரம்பபிரிவு, கீழ்பிரிவு, மத்தியபிரிவு | பேச்சு | யாழ். மத்திய கல்லூரி | காலை 10 மணி |
| 10 - 07 - 1994 | மேற்பிரிவு, அதிமேற்பிரிவு | கட்டுரை | யாழ். மத்திய கல்லூரி | காலை 9 மணி |
| 10 - 07 - 1994 | மேற்பிரிவு. அதிமேற்பிரிவு | பேச்சு | யாழ். மத்திய கல்லூரி | காலை 10 மணி |

மேற்படி போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்த மாணவர்கள் உரிய நேரத்திற்கு சமுகம் கொடுத்து போட்டிகளில் பங்குபற்றுமாறு அன்பு— r கேட்டுக் கொள்கிறோம்.

இல, 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

பதில் செயலாளர்.

குறிப்பு:- 1) மாணவர்களுக்கு தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படமாட்டாது.
2) பாடசாலை மாணவர் வினாடி வினா போட்டி திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(சி-9764)

---

# கேள்வி அறிவித்தல்

### ஐ டி. ஏ. (உலகவங்கி) வேலைகள் வடக்கு - கிழக்கு மாகாண சபை
### பொறியியல் வேலைகள் அமைச்சு
### பாடசாலை கட்டிட வேலைகள் பொறியியலாளர் அலுவலகம்,
### கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி பாடசாலை கட்டிட வேலைகள் பொறியியலாளர் அலுவலகத்தினால் கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் பாடசாலை வேலைகள் பொறியியலாளரினால் 1994-ம் ஆண்டு ஆடி மாதம் 20-ம் திகதி முற்பகல் 10.00 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| இல. | வேலைகளின் விபரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 1. | யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தி. திருத்த வேலைகள் | ரூபா 250/- | ரூபா 1200/- |
| 2. | யா/கொற்றாவற்றை அ.மி.த.க பா. திருத்த வேலைகள் | ரூபா 250/- | ரூபா 650/- |
| 3. | யா/பொலிகண்டி இ.த.க.பா. திருத்தவேலைகள் | ரூபா 250/- | ரூபா 800/- |
| 4. | யா/கரணவாய் தாமோதர வித்தி. திருத்த வேலைகள் | ரூபா 250/- | ரூபா 850/- |

மேற்படி வேலைகளுக்கு ரூபா இரண்டரைலட்சத்திற்கு (ICTAD)(ரூபா250,000/-) இக்ராட் ஸ்தாபனத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றவர்கள் ஆவார்கள்.

வேலைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிடப்பட்ட கேள்வி வைப்புப் பணத்தை நிர்மாணத் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 1994ஆம் ஆண்டு ஆடி மாதம் 15ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை பாடசாலை கட்டிட வேலை பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் மேலதிக விபரங்களை பாடசாலை கட்டிட வேலைகள் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை கட்டிட பொறியியலாளர் அலுவலகம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். (சி-9759)

**எம். ஏ. பிரான்சிஸ்**
பாட சாலை கட்டிட
வேலைகள் பொறியியலாளர்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு..**

சோப்பைக்கும் உதட்டுக்கும் இடையே கூட தேநீர் சிந்திவிடும் சந்தர்ப்பம் தாராளம் உண்டு.

- ஆங்கிலப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 06-07-94
தொலைபேசி:
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# பொதுஜன முன்னணி அளித்த ஏமாற்றம்

இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒரு புதிய கொள்கையுடன் வரும் என எதிர்பார்க்கப்பட்ட பொதுஜன முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவந்துள்ளது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவியும், மேல் மாகாண சபை முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்காவும், ஏனைய பொதுஜன முன்னணிப் பிரமுகர்களும் குறிப்பிட்டதுபோன்று அவர்கள் முன்வைத்துள்ள இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்த அறிவிப்பில் முன்னேற்றகரமான எதுவுள்ளது என்பதுகுறித்து பலருக்குச் சந்தேகமே தோன்றியுள்ளது.

புவியியல், பொருளாதார, சமூக ரீதியாக புதிய நிர்வாக அலகுகள் ஏற்படுத்தப்படும் என்ற பொதுஜன முன்னணியின் அறிவிப்பானது, வழமைபோலவே மேலோட்டமான, பொதுப்படையான அறிவிப்பே ஒழிய, ஒரு தெளிவான வரையறையுடன் கூடிய இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுத்துச் செல்ல உதவக் கூடியதாக இருக்கும் எனக் கூறிவிட முடியாது.

புதிய நிர்வாக அலகுகள் புவியியல், பொருளாதார, சமூக ரீதியாக உருவாக்கப்படும் என கூறப்பட்டதில் புதிய நிர்வாக அலகு எது என்பது மட்டுமல்ல, அவற்றைப் பாகுபடுத்துவதற்கு உதவக் கூடிய அல்லது அடிப்படையாகக் கொள்ளக் கூடிய புவியியல், பொருளாதார, சமூக அலகுகள் எவை என்பது பற்றியும் குறிப்பிடப்படவில்லை. இவ்வரையறையில்லாமையானது, கட்சியானது இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு முடிவுக்கு வரவில்லை அல்லது,கடந்த காலத்தைப் போன்றே இனப்பிரச்சினை விவகாரத்தில் தெளிவற்ற, ஏமாற்றுத்தனமான கொள்கையைக் கடைப்பிடிக்க முனைகின்றது என்றே கொள்ள வேண்டும்.

# வாக்குச்சீட்டுக்கான கடதாசி லண்டனிலிருந்து வந்தது

(கொழும்பு)

வாக்குச் சீட்டுக்கள் அச்சிடுவதற்கான பாதுகாப்பு கடதாசிகள் லண்டனிலிருந்து அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது. கணக்காய்வு அதிகாரிகள், அரசாங்க கூட்டுத்தாபன அதிகாரிகள் மற்றும் பொலிசார் முன்னிலையில் பாதுகாப்பு சீல் அகற்றப்பட்டு அச்சக கூட்டுத்தாபனத்திற்கு எண்ணி வழங்கப்பட்டுள்ளது.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வது முடிவுற்றதும், வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் வேலை ஆரம்பமாக இருக்கிறது கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படவுள்ளன. அச்சாகும் போது ஒரு கடதாசித்துண்டு தானும் வெளியே போகாதவாறு கண்காணிப்பதற்காக பொலிஸ் அதிகாரி ஒருவர் கடமையில் ஈடுபடுத்தப்பட இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு மாவட்டத்தில் ரணில் போட்டியிடுவார்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது கொழும்பு மாவட்டத்தின் தலைமை வேட்பாளராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா போட்டியிட இருப்பதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை கம்பஹா மாவட்டத்திற்கு தலைமை வேட்பாளராக விஜயபால மெண்டிஸ், கண்டி மாவட்ட தலைமை வேட்பாளராக காமினி திசாநாயக்காவும் அனுராதபுர மாவட்டத்திற்கு எம். எச். அதிகாரியும், பொலனறுவை மாவட்டத்திற்கு றுக்மன் சேனநாயக்காவும் தலைமை வேட்பாளராக போட்டியிட இருப்பதாக கட்சி வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இதே வேளை கம்பஹா மாவட்ட ஐ. தே. க. வேட்பாளர்களில் ஒருவராக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பருமகன் போட்டியிட இருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

# விட்டுக் கொடுக்கும் நிலை கட்சிக்கு ஏற்படலாம்

-தினேஷ் குணவர்த்தனா

(கொழும்பு)

பொதுவான கொள்கையின் வெற்றிக்காக கட்சியின் சில கொள்கைகளை விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

''லங்கா தீப'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலே மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் எமது நாட்டின் தேசிய உரிமையை விற்க நடவடிக்கை எடுக்கும் போது நாம் மௌனமாக இருக்கவில்லை. அதனை எதிர்த்து குரல் எழுப்பினோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்தேவி நடவடிக்கை தேடி அழிப்பதற்கானதாம்

ஐ.தே.க. அதிகாரி தகவல்

(கொழும்பு)

வடபகுதியில் விடுதலைப் புலிகளிடம் இருந்து நிலப் பகுதிகளை கைப்பற்றுவதற்காக வடமராட்சி இராணுவ நடவடிக்கைக்குபின்பாக எந்த பாரிய இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என ஐ தே. க தேர்தல் பிரசாரத்திற்கு பொறுப்பான

அனைவராலும் பேசப்படும் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தேடி அழிக்கும் நடவடிக்கையே தவிர வேறில்லை. போருக்கு அரசியல் தீர்வே காணப்படவேண்டும். தேர்தலுக்கு முன்பாக அங்கு இராணுவ நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளும் திட்டமேதுமில்லை எனவும் அவர் கூறி

# ஆயுதங்களுடன் உள்ள வரை புலிகளுடன் பேச்சு இல்லை

ஐ. தே. க. பொதுச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் ஆயுதங்களுடன் இருக்கும் வரை அவர்களுடன் வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாக எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தப்படமாட்டாது.விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழியில் ஈடுபடுவதற்கு தேர்தல் ஒரு சந்தர்ப்பம் ஆகும். 1978 போல வடக்கு கிழக்கு மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் இப்போது இருக்கிறது. வாக்கெடுப்பு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நடத்தப்படும். இவ்வாறு ஐ தே. க வின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜய சேகரா தெரிவித்தார்.

சண்டே ஒப்சேர்வர் வார இதழுக்கு பேட்டியளித்த அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ. தே. க. பொதுத் தேர்தலில் வெற்றி வாகை சூடும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். பொது மக்கள் முன்னணிக்கு ஆதரவளிப்பது பொருளாதாரத் துறையில் பெரும் நாசத்தையே ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டார்.

# சிவகௌரிக்கு முதற் பரிசு

(சிட்னி)

அவுஸ்திரேலியாவிலுள்ள விக்டோரியா - இலங்கை தமிழ் சங்கத்தின் இரண்டாம்ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெற்ற சர்வதேச ரீதியிலான சிறுகதைப்போட்டியில் விக்டோரியாவில் வசிக்கும் திருமதி ஆ. சிவகௌரியின் ''நடந்து வந்த பாதைகள்'' என்ற கதைக்கு முதற்பரிசான 200 அவுஸ்திரேலிய டொலர் கிடைத்தது. இவர் யாழ் அரச அதிபர் மாணிக்கவாசகரின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

# செல்லச்சாமி நீதிமன்றம் செல்வார்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள அதன் முன்னாள் பொதுச் செயலாளர் எம். எஸ் செல்லச்சாமியும் அவரது சகாக்களும் நீதிமன்றத்திற்கு செல்ல உள்ளனர். தாம் வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து நீதிமன்றம் செல்வது குறித்து சட்டத்தரணிகளுடன் சட்ட ஆலோசனைகளை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

# முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் புனித சாள்ஸ் மகா வித்தியாலய முத்தமிழ் விழா இன்று பி. ப. 2-30 மணியளவில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக, வலயம் ஒன்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு, ச, சுப்பிரமணியம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் திரு, ஆர், எஸ், நடராசா, மரியன்னை பேராலய பங்குத் தந்தை அருட். திரு. அன்ரன் இராஜநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர்

# தஸ்லிமா நஸ்ரீனின் நூல் இலங்கையில் விற்பனையாம்

(கொழும்பு)

பங்களாதேஷில்,புனித குர்ஆனில் மாற்றமேற்படுத்த வேண்டும் எனக் கோரிய பெண் எழுத்தாளரான தஸ்லிமா நஸ்ரீன் எழுதிய நூல் இலங்கையில் சில பகுதிகளில் விற்பனை செய்யப்படுவதாகவும், இதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறும்,ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன் இஸ்லாம் மதத்திற்கு விரோதமாக நபிகள் போதனைக்கு எதிராக எழுதிவந்தார் எனக் குற்றம்சாட்டி,அவருக்கு அந்நாட்டு மத அமைப்புக்கள் மரண தண்டனை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**சூரியகந்த எலும்புக்கூடு விவகாரம்**

# சர்வதேச வைத்திய நிபுணர்களை அழைக்குக

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய சூரியகந்த பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் பற்றிய விசாரணைக்கு சர்வதேச வைத்திய நிபுணர்களை அழைக்குமாறு சிறிலங்கா அரசிற்கு ஐரோப்பிய சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

காணாமற் போனவர்கள் என சந்தேகிக்கப்படுவோரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றைப் பரிசோதனை செய்வதற்கு சர்வதேச வைத்திய நிபுணர்களை அழைக்க வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் செயற்குழுவின் ஆலோசனையை சிறிலங்கா அரசு செயற்படுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 8ம் திகதி ஐரோப்பிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சிறிலங்காவின் நிலைமை பற்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைக்கு அமையவே இவ் வேண்டுகோளை ஐரோப்பிய சங்கம் விடுத்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காணாமல் போய் ஒருவருடம் கடந்துவிட்டால் அவர்கள்இறந்திருக்கலாம் எனக்கருதிஅவர்களின் உறவினருக்கு மரணச் சான்றிதழ் வழங்க வேண்டும்

சிறிலங்காவில் மனித உரிமைகள் கடுமையாக மீறப்படுகின்றன. அத்துடன் பயங்கரவாத நடவடிக்கையில் சம்பந்தப்படாதவர்கள் எனத் தெரிந்தும் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுகின்றனர். இது நிறுத்தப்பட வேண்டும்.

மேலும் மனித உரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபடும் அதிகாரிகளுக்குதமிழரோ சிங்களவரோ என்ற பேதமின்றி தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவு அபிவிருத்திக்கு

என்றே கொள்ள வேண்டும்.

இதேசமயம் போதுமான அளவில் நியாயமான வகையில் அதிகாரப் பரவலாக்கல் செய்வதற்கும் போரை முடிவிற்குக் கொண்டு வருவதற்கும், புதிய நிர்வாக அலகுகளுக்கு வழங்குவது குறித்தும் இத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாயினும், இது பெரியதொரு நம்பிக்கையையோ அன்றி, உற்சாகத்தையோ கொடுக்கக் கூடிய அறிவிப்பல்ல.

ஏனெனில் இவ்வாறான அறிவிப்புக்கள் 17 வருடங்களாக ஆட்சியில் இருந்த ஐ. தே. க. உட்பட சகலரும் கூறிவந்தது தான். இதில் எந்த விதமான முன்னேற்றங்களும் ஏற்பட்டதாக இல்லை. மாறாக, மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதாகக் கூறிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களும் இடைநடுவில் பறிக்கப்பட்டே வந்தன.

அத்தோடு, பல்வேறு இனங்களினதும் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் ரீதியிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என பொதுஜன முன்னணி தெரிவித்திருப்பதானது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ அன்றி அதன் கூட்டணியோ சிங்கள இனத்தைத் திருப்திப்படுத்தக் கூடிய திட்டங்களைத் தவிர வேறு எதையும் முன்வைக்கத் தயாராக இல்லை என்பதை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

இந்த வகையில் பேரினவாதத்தின் பிடிக்குள் சிக்கியுள்ள சிங்கள மக்கள் ஏற்கக் கூடியதாக சிறுபான்மை இனங்களுக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதென்பது, அத்துணை சாத்தியப்பாடான தொன்றல்ல. கடந்த காலத்தில் ஐ. தே. கட்சியும் இவ்வாறானதொரு நிலைப்பாட்டையே எடுத்திருந்தது. இதுவே இனப்பிரச்சினை விவகாரத்தில் இருந்து தான் தப்பித்துக்கொள்வதற்காக கடந்த காலத்தில் கடைப்பிடித்த வழியும் ஆகும்.

இந்நிலையில், பொதுஜன முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் இனப்பிரச்சினையில் புதிதாக எதையும் கொண்டு வந்துள்ளதாகத் தெரியவில்லை. சிங்களப் பேரினவாதத்திற்கு முழுமையாககட்டுப்பட்டநிலையிலேயே அது தனது தீர்மானத்தை எடுத்துள்ளது. [இதனால் எவ்விதமான பலனும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. இந்நிலையானது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை சந்திரிகா குமாரணதுங்கா கொண்டு வந்து விடுவார் என எண்ணியவர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

---

சாரத்திற்கு பொறுப்பான ஒருவர் தெரிவித்துள்ளார்.

மில்லை எனவும் அவர் கூறினார்.

## புது நிர்வாக அலகிற்கு தேவையான அதிகாரம்

### பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரகடனம்

(கொழும்பு)

புவியியல், பொருளாதார, சமூகரீதியாக புதிய நிர்வாக அலகுகள் ஏற்படுத்தப்படும் என்று பொதுமக்கள் முன்னணியின் தேர்தல்விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது.

அவ் விஞ்ஞாபனத்தில் மேலும் போதுமான அளவில் நியாயமான வகையில் அதிகாரப் பரவலாக்கல் செய்வதற்கும் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கும், புதிய நிர்வாக அலகுகளுக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவதற்கும், பல்வேறு இனங்களதும் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அரசியலமைப்புக்கு திருத்தம் செய்வதற்கும், புதிய அலகு ஏற்படுத்தப்படும் வரை மாகாண சபைகள் செயற்படுவதற்கும், வகை செய்யப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குண்டுவீச்சை கண்டித்து நவ சமசமாஜக்கட்சி மகஜர்

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் சிறிலங்கா படையினரின் குண்டு வீச்சுகள் மற்றும் எறிகணை வீச்சுகளைக் கண்டித்து அதனை நிறுத்தக் கோரி சிறிலங்கா நவ சமசமாஜக்கட்சி மகஜர் ஒன்றை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினரால் இம்மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது இதில் கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களிலும் அதன் பின்னரும் இலங்கையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் நடைபெற்ற சிறிலங்கா படையினரின் தாக்குதல்கள் குறித்து சிறிலங்கா அரசிற்கு பல பகுதிகளிலிருந்தும் மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இருந்த போதிலும் அண்மையில் மட்டக்களப்பு சித்தாண்டியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சில் இரு சிறுமிகள் கொல்லப்பட்டனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரதானகட்சிக்கு ஆதரவாக தமிழர் வாக்களிக்கக்கூடாது

### - கொழும்பு தமிழர் கோரிக்கை

சிறுபான்மை இன மக்கள் இரு பிரதான கட்சிகளுக்கும் வாக்களிக்கக் கூடாது என கொழும்பு வாழ் தமிழர் நடவடிக்கைக் குழு கேட்டுள்ளது அவ் வேண்டுகோளில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இலங்கை அரசானது சிங்கள சமூகத்தின் நலனுக்காக திட்டமிட்ட ரீதியாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இது பெரும்பான்மை இனத்தின் அப்பட்டமான சர்வாதிகாரமின்றி வேறொன்றுமில்லை. எனவே, தம் சொந்த வேட்பாளர்களுக்கே பெருமளவில் வாக்களிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

ஆகியோர் கலந்து கொள்வர்

## கருத்தாடல்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையும் உளமருத்துவத் துறையும் இணைந்து நடத்தும் கருத்தாடல் இன்று பிற்பகல் நான்கு மணியளவில் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாடகத்தின் உளவியற் பயன்பாடுகள் என்னும் பொருளில் நடைபெறவிருக்கும் இக் கருத்தாடலில் பேராசிரியர் கா.சிவத்தம்பி, கலாநிதி டி.ஜே.சோமசுந்தரம், வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன், சிதம்பரநாதன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

## மெய்வல்லுநர் தேர்வுகள்

மெய்வல்லுநர் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகளை யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்த இருக்கிறது. இதற்காக விண்ணப்பங்களை எதிர்வரும் 15 - ம் திகதி வரை அனுப்பலாம். தொடக்குநர், நேரக் கணிப்பாளர், சுவட்டு நிகழ்ச்சி மத்தியஸ்தர்கள், மைதான நிகழ்ச்சி மத்தியஸ்தர்கள் ஆகியோருக்கான தேர்வுகள் நடத்தப்படவுள்ளன.

## குளம் ஆழமாக்கல்

(கொழுப்புத்துறை)

அரியாலை ஆனந்தன்வடலி வீதி நீர்நொச்சித்தாழ்வு 150 அடி சுற்று வட்டம் குளம் தற்போது யாழ்.மாநகரசபை ஊழியர்களால் ஆழமாக்கப்பட்டு வருகிறது.

மழை நீரைத் தேக்கி வைக்கும் நந்நோக்குடனும், பள்ளக்காணிகளை குளத்தின் மண்ணைக் கொண்டு செப்பனிடுவதற்காகவும் இவ்வேலைகள் நடைபெற்று வருகிறது.

(24)

---

## கூட்டுறவு அபிவிருத்திக்கு நிதிஒதுக்க அதிகாரமில்லை

### பிரதேச செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலாளர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள போதும் பிரதேச செயலாளர்கள் பன்முக வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு அமைப்புகளுக்கு நிதி ஒதுக்க முடியாது என்று பிரதேச செயலாளர் க. குணராசா கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் அதிகாரப் பரவலாக்கம் மூலம் கூட்டுறவு நிறுவனங்களை பிரதேச செயலாளர் நிர்வகிப்பதனால் அந்த எல்லைக்கு உட்பட்ட ப.நோ.கூ சங்கங்களின் உணவு விநியோகத்தை சீரான முறையில் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்-

## மெய்வல்லுநர் போட்டிகள் வருடாந்தம் நடத்த ஏற்பாடு

கடந்த வருட இறுதியில் ஸ்தாபிக்கப்பட்ட யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் இந்த ஆண்டு முதல் வருடம் தோறும் யாழ் மாவட்ட ரீதியிலான மெய்வல்லுநர் போட்டிகளையும், யாழ் மாவட்ட கனிஷ்ட மெய்வலலுநர் போட்டிகளையும் நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

முதலாவது கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி ஆகஸ்ட் மாதத்திலும், யாழ் மாவட்ட மெய்வல்லுநர் போட்டி செப்டம்பரிலும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கனிஷ்ட போட்டிகள் 18, 20 வயதுப் பிரிவுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக நடாத்தப்படும்.

யாழ் மாவட்டப் போட்டி வயது வேறுபாடின்றி ஆண், பெண் இரு பாலாருக்கும் தனித்தனியாக நடைபெறும்.

சங்கத்தில் பதிவு செய்துள்ள கழகங்கள் ஊடாக அல்லது தனிப்பட்ட முறையில் மெய்வல்லுநர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றலாம்.

இப்போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பதக்கங்களும், வெற்றிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994.07.06 புதன் இரவு

08. 01 - கரும்புலிகள் தின நிகழ்ச்சிகளின் தொகுப்பு
08. 30 - செய்திகள்
08. 40 - நாடகம் - "ஞானம் புதிது."

### 19/4. 07. 07 வியாழன் காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - விடுதலை கீதங்கள்
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# அரசின் பலமான கோட்டைகளை ஊடறுக்கவல்ல புலிகள் மனோபலம்

## கடற்புலிகள் சிறப்புத் தளபதி சூசை

(வடமராட்சி)

சிறிலங்கா அரசாங்கம் எது ஒரு பலமான கோட்டை என எண்ணுகிறதோ அந்த இடத்திற்குக் கூட ஊடறுத்துச் செல்லக்கூடிய உயிராயுதமாக விடுதலைப் புலிகளின் மனோபலம் இருக்கிறது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் காலத்தின் தேவையை அறிந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிகவும் கூர்மையாக இலக்கை அடையக் கூடிய வழிகளை ஏற்படுத்தும் இடங்களில் இந்த உயிராயுதம் தொடர்ந்து பாவிக்கப்படும்

இவ்வாறு நேற்று கரும்புலிகள் நாளையொட்டி நெல்லியடியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தெரிவித்தார்-

இந்த ''உயிராயுதம்'' என்ற பதத்தை கடற் கரும்புலியாகச் சென்ற கப்டன் மணியரசன் அவர்கள் தாக்குதலுக்குச் செல்வதற்கு ஆறு மணி நேரத்திற்கு முன்னதாக கடற்கரை வெளியொன்றில் அவரை பேட்டி கண்டபோது அவராக தன்னுடைய வாயிலிருந்து கூறினார் 16 வயது நிரம்பிய அந்த கரும்புலி சிறுவன் உயிராயுதம் என்ற இந்த ஆயுதத்தை பயன்படுத்தி எணணற்ற ஆயுதங்களையும் தமிழீழ மக்களின் இன்னல்களையும் விலக்குவேன் என கூறினார்-

எமது தலைவரின் வழிகாட்டலில் கடற்புலியாக, தரைப்புலியாக மூலை முடுக்கெல்லாம் காலத்தின் தேவையை அறிந்து உயிராயுதமாக தங்களை பயன்படுத்துவதற்கு இன்று எத்தனையோ கரும்புலிகள் தயாராக இருக்கின்றனர் இன்று கரும்புலிகள் அணி பலம்வாய்ந்த அணியாக உருவாக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது என மேலும் தெரிவித்தார்.

## கரும்புலிகளின்

### வடமராட்சியில்

வடமராட்சிக் கோட்டத்தில் மாலை 6.40 மணியளவில் நெல்லியடிச் சந்தியில் இருந்து நெல்லியடி கரும்புலி நினைவு மண்டபத்தை நோக்கி கரும்புலிகள் நாள் ஊர்வலம் நகர்ந்தது. முதலாவதாக பான்ட் வாத்திய இசையும் தொடர்ந்து சீருடை அணிந்த மாணவ மாணவிகளால் 27 கரும்புலிகள் நினைவாக தீச்சுடர் ஏந்திச் செல்லப்பட்டது அதனைத் தொடர்ந்து கரும்புலிகள் உருவப் படங்கள் தாங்கிய ஊர்தி பின் தொடர்ந்தது. அதனையடுத்து கரும்புலிகள் மகிமை போற்றும் பண்ணிசை இசைத்தவாறு குழு ஒன்று தொடர்ந்தது. தொடர்ந்து போராளிகள் பொதுமக்கள் பலரும் பின் தொடர்ந்தனர்.

கரும்புலி முதல் தாக்குதல் நேரம் 7.05 மணிக்கு கரும்புலிகள் 27 பேருக்கும் மலரஞ்சலி செலுத்தும் வைபவம் ஆரம்பமானது முதலில் 14 கரும்புலிகளுக்கு தீப அஞ்சலி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பூநகரி தாக்குதல் வெற்றிககாக பலாலி முகாமில் தாக்குதல் புரிந்த 13 கரும்புலிகளின் தொகுதிப் படங்களை கடற்புலிகளின் விசேடதளபதி சூசை திரைநீக்கம் செய்து வைத்ததையடுத்து தீபஞ்சலி மலரஞ்சலி செலுத்தப்பட்டன. பொதுமக்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்ட மேடைக்கு அணிவகுப்பு சென்றது. இதேவேளை 27 கரும்புலிகள் நினைவாக அவர்களது பெயர் பொறித்து வேளை வீதியின் இரு மருங்கிலும் சாரணர் அணிவகுத்து நின்றனர்- இவ் உருவப்படத்திற்கு முன்னால் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பான்ட் வாத்திய அணி சென்றது- இறுதியாக தீவர்த்திகளை ஏந்தியவாறு மாணவர்கள் அணிவகுத்துச் சென்றனர்-

கூட்டம்நடைபெறும்மைதானத்தை உருவப் படங்கள் சென்றடைந்ததும் மாவீரர்களுடைய நினைவுருவப் படங்களுக்கு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார்கள்,

மாவீரர்களின் நினைவுருவப்படங்கள் அதற்கென அமைக்கப்பட்ட விசேட மேடையில் வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பெரும் திரளான பொது மக்கள் கலந்து கொண்டு உள்ளம் நெகிழ்ந்து கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். பின்னர் பொதுக்கூட்டம் ஆரம்பமானது. இறுதியில் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

### தீவகம், கடற்புலிகள் பிரதேசம்

தீவகம் மற்றும் கடற்புலிகள் இணைந்து நேற்று கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் கரும்புலிகள் நாளை மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டித்தனர்.

நேற்றுமாலை 6.15 மணியளவில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயச் சந்தியில் இருந்து 27 கரும்புலி வீரர்களின் உருவப்படங்களைத் தாங்கிய படகு வடிவில் அமைக்கப்பட்ட விசேட ஊர்தி பான்ட் வாத்திய இசையுடனும் தீவர்த்திகளுடனும் நகர பேராளி

## பரிசு நாள்

(தொல்புரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பரிசு நாளும், தாபகர் தினமும் இன்று பிற்பகல் 2.15 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வில் வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. க கந்தசாமி அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். (41)

## சுயேட்சைக் குழுவில் குமார்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுக்காக குமார் பொன்னம்பலம் நேற்று நியமனப்பத்திரம் தாக்கல் செய்தார். கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் சுயேட்சைக் குழு ஒன்றின் தலைவராக இவர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்துள்ளார்

## சிறிலங்கா

ஐந்து கடற்படை படகுகளுக்கு பதிலாக மேலும் இரு இஸ்ரேல் டோரா படகுகளை வாங்கவுள்ளது என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## மேஜர்

மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் அவரது நினைவுக்கல் நாட்டப்படும்.

# யுத்தத்தை முடித்துவைக்கக்கூடிய புதிய ஆட்சி வந்தால் பேசுவோம்

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

(நெல்லியடி)

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நாம் தயார். ஆனால், ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல் முடிந்தபின்புதான் பேசுவோம். நடக்கும் தேர்தலைப் பார்ப்போம். சிலவேளை புதிய ஆட்சி வரலாம். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து புலிகளுடன் பேசக்கூடிய புதிய சக்தி வந்தால் நாம் பேசத் தயார். நாம் சமாதானத்தின் கதவுகளை மூடவில்லை இவ்வாறு விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவு நாள் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில்;

சென்ற ஆண்டு சுவீடன் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார், இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சந்தித்தார் அவர் ஓர் ஆராய்ச்சி நூல் எழுதிக்கொண்டிருப்பதாக சொன்னார், அதாவது தியாகம் பற்றிய ஆராய்ச்சி நூல் விடுதலைப் புலிகளின் தியாகம் பற்றி ஆராய்ந்து அதுபற்றி எழுதப்போவதாக சொன்னார் அவரிடம் நீண்ட நேரம் நான் பேசினேன். அப்போது அவர் கேட்டார் உங்களது தற்கொலைப்படை பற்றி விளக்கமளிப்பீர்களா என்று கேட்டார். நான் எம்மிடம் ஒரு தற்கொலைப்படை இல்லை என்றேன். எம்மிடம் இருப்பது ஒரு தற்கொடைப் படை என்றேன். தற்கொலையும் தற்கொடையும் வேறு வேறு தற்கொலை என்றால் தெரிந்தது இங்கு பலர் தற்கொலை செய்கின்றனர்.

காதல் தோல்வி, விரக்தி கொண்டவர்கள் தற்கொலை செய்கின்றனர்- தமிழ் நாட்டில் இது அதிகமாக உள்ளது- அங்கு கருணாநிதிக்குக் காய்ச்சல் வந்ததும் எண்ணெய் ஊற்றி நெருப்புக் கொளுத்தி தற்கொலை செய்கின்றனர்.

ஆனால் இங்கு எமது புலிப்படை வீரர்கள் தற்கொலைப் படையாக செயற்படவில்லை அவர்கள் ஓர் தற்கொடை இயக்கம்- தற்கொடை என்றால் ஒருவன் ஓர் உன்னத இலட்சியத்திற்

இதில் புலிகளின் நிலை என்ன? பேச்சுவார்த்தைகள் சமாதான முயற்சிகள் எப்படி இருக்கிறது என்ற பல கேள்விகள் இப்போது மக்கள் முன் எழுகிறது-

விடுதலைப் புலிகள் என்னிடம் ஒரு கடையை திறந்து நடத்தும்படி தந்தார்கள். அங்கே சமாதானம், பேச்சுவார்த்தை, நலலெண்ணம், சமஷ்டி இப்படியான சாமான்களையெல்லாம் வைத்துக் கொண்டு கடையைக் திறந்து வைத்திருந்தேன். கொழும்பிலிருந்து கடைக்குப் பல பேர் வந்து போனார்கள் ஆனால் ஒருத்தரும் அதுகளை வாங்குகிற நோக்கம் இல்லை. இக் கடையை பார்த்துக்கொண்டு திரும்பிப் போனார்கள். வந்தவர்களிலை ஒருவரும் அரசியல் சார்ந்தவர்கள் இல்லை எல்லாரும் சுவாமிமார், ஆயர்மார், பாதிரிமார் இப்படியானவர்கள்.

நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை அவர்களுக்கு நன்றாக விளக்கினோம். கொழும்புக்குச் சென்று புலிகள் சமாதானத்தைவிரும்புகிறார்கள். சமாதானத்துக்கு என்றொரு கடையைத் திறந்து வைத்திருக்கின்றார்கள். நீங்கள் அங்கே போய் அவர்களுடன் வியாபாரம்செய்யலாம்என்று இந்த ஆயர்மார் சொன்னார்கள். ஆனால் கொழும்பில் இருந்து அரசியல்வாதிகள் ஒருவரும் இங்கு வரவில்லை. அவர்களுக்குச் சமாதான பேச்சுவார்த்தைகளில் விருப்பமில்லை உங்களுக்கு தெரியும் இந்த வரலாறு.

கடைசியாக சபாநாயகர் முகமது இங்கு வருவதாகச் சொன்னார். நாமும் சந்தோசப்பட்டோம். ஒரு அரசியல்வாதி வருகிறார். ஒரு சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினர்,ஒரு முஸ்லிம் தலைவர் ஒரு மூத்த யு என் பி உறுப்பினர் வரப்போகிறேன் என்றார். நாம் வருமாறு அழைப்பு விடுத்தோம் இவருக்காக இங்கு பல ஏற்பாடுகளைச் செய்திருந்தோம். ஆனால் அவர் வரவில்லை.

டிங்கிரிபண்டா இந்த பேச்சுவார்த்தை வேண்டாம் புலிகளிடம் போக வேண்டாம் என்றுசொல்லி சபாநாயகரை மறித்து விட்டார்.

உங்களுடைய தீர்வு திட்டத்தை முதலில் அரசு ஏற்றுக் கொண்டதா? அவ்வாறு ஏற்றுக் கொள்ளாத விடத்து நீங்கள் இங்கு வந்து புலிகளுடன் பேசுவதில் அர்த்தமில்லை என நாம் அவருக்கு பதில் அனுப்பினோம்-

இவர் அனுப்பிய கடிதத்தில் தான்இ-தொ-கா- தலைவர் என்ற ரீதியில் வரப் போவதாக எழுதியிருந்தார் நாம் அப்படியான ஓர் தொழிற் சங்கத்துடன் பேசத் தயாராக இல்லை அரசாங்கம் ஓர் தீர்வுத் திட்டத்தைப் முன்வைத்து அதன் அடிப்படையில் பேச்சு நடாத்த விரும்பினால் நாம் பேசத் தயார் அங்கு இருந்து கொண்டு அரசாங்கத்திற்கு இ-தொ-கா- சார்பிலும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் திட்டத்தை வைத்து அரசாங்கத்தின் ஒப்புதல் எதுவும் இன்றி இ தொ கா. தலைவராக வருவதாக கூறினால் அதை எப்படி நாம் ஏற்றுக்கொள்வது?

அரசு கூறுகிறது முதலில் புலிகளிடம் சென்று ஒப்புதலை வாங்கி வாருங்கள் என்று. நாங்கள் ஏன் முதலில் ஒப்புதலை கொடுக்க வேண்டும்?

எமக்கு என்று ஓர் இலட்சியம் உண்டு, அரசியல் குறிக்கோள் உண்டு அதை எமது தலைவர் திருப்பி திருப்பி சொல்லியிருக்கிறார். எங்களது இலட்சியம் தனியரசு தமிழீழம், மாற்றுத் திட்டம் வைக்க வேண்டும் என்றால் அந்த மாற்றுத் திட்டத்தில் தமிழ் மக்களின் தாயகம் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும் தமிழ் மக்களின் தேசியம் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்- தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமை ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்- அப்படி தீர்வுத்திட்டத்தை முன்வைத்தால் அதை நாம் பரிசீலனை செய்யலாம் என்றோம்-

வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு முழுமையான சமஷ்டித் திட்டத்தை என்றாலும் முன்வைத்தால் அதனையும் நாம் பரிசீலிக்க தயார் என்று முதலே சொல்லிருக்கிறோம் இதற்கு மிஞ்சி நாம் இறங்க இயலாது.

ஐலன்ட் பத்திரிகையில் ஓர்

விடுதலை இயக்கம் எமது வீரத்தால், தியாகத்தால் எமது மண்ணில் நாம் ஆட்சி நடத்துகிறோம்- எமக்கு சிங்கள பாராளுமன்றம் தேவையில்லை. ஒரு காலத்தில் எமக்குத் தேவையானால் இங்கு நாம் தமிழீழ பாராளுமன்றத்தை அமைப்பது பற்றி யோசிப்போம்-

வடகிழக்கு மாகாணம் சிறிலங்கா அரசின் கட்டுப் பாட்டின் கீழ் இல்லை என்பதை இத்தேர்தல் மூலம் உலகம் புரிந்து கொள்ள வேண்டும். வட கிழக்கில் பெரும்பகுதி நிலப்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இங்கு அவர்களால் தேர்தல் நடாத்த முடியாது விரும்பினால் குறுக்குவழி செய்யலாம். செய்துவிட்டுப் போகட்டும். இது சட்ட விரோதமான செயல் அடிப்படைமனித உரிமைகளை மீறும் செயல்

நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள் சமாதானத்தை விரும்புகிறீர்கள் என்று எங்களுக்குத்தெரியும் ஆனால் நாம் என்ன செய்ய முடியும்? கடந்த 15 வருடங்களாக நாம் இரத்தம் சிந்திக்கொண்டிருக்கிறோம் ஆறாயிரம் போராளிகளைப் பலிகொடுத்து நிற்கிறோம் பல தியாகங்களை செய்திருக்கிறோம் இன்னும் செய்யத் தயாராகவுள்ளோம் 40வருடகால போராட்ட வரலாற்றிற்கு பிறகு 40 ஆயிரம் மக்கள் இந்த மண்ணில் இறந்த பின்பு இவ்வளவு அழிவுகளுக்கும், சாவுகளுக்கும், இரத்த ஆறு ஓடியதற்கும் பிறகு விட்டுக்கொடுக்க முடியுமா?

நாம் இங்கு பலவீனமான நிலையிலா இருக்கிறோம் இங்கு ஒரு சுயாட்சி அமைப்பு உருவாகி வருகிறது முன்னர் சிங்கள பொலிஸ் நடமாடிய இடத்தில் தமிழீழ காவல்துறை நடமாடுகிறது தமிழனுக்கென்று ஓர் இராணுவம் இருக்கிறது நிர்வாக அமைப்பு உள்ளது வங்கிகள் வருகிறது இவை எல்லாம் என்ன? இவை எமது சுயாட்சி அமைப்பின் அலகுகள் அல்லவா? ஒரு தனி அரசிற்கான அத்திவாரம் உண்டு நாம் பலமாகவேயுள்ளோம்

இங்கு பத்திரிகையாளர் வந்தபோது அரசியல்

குப்பு சென்றது. இதேவேளை 27 கரும்புலிகள் நினைவாக அவர்களது பெயர் பொறித்து 27 புகைக்கூடுகள் விடப்பட்டன. 27 கரும்புலிகள் நினைவாக எடுத்துவரப்பட்ட தீச்சுவாலைகள் மேடை முன் நாட்டப்பட்டது. தொடர்ந்து மௌன அஞ்சலி நடைபெற்றது. அதனையடுத்து தமிழீழ தாயகப் பாடலை போராளிகளும் பொதுமக்களும் இசைத்தனர். தொடர்ந்து கூட்டம் ஆரம்பமானது.

### தென்மராட்சியில்:-

தென்மராட்சிக் கோட்டத்தில் மீசாலை நகுலன் மைதானத்தில் தென்மராட்சி கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கலைவாணன் தலைமையில் முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன-

மாலை 6.30 பணியளவில் 27 கரும் புலி மாவீரர்களது உருவப் படங்களை மாணவிகள் புத்தூர்ச் சந்தியில் இருந்து நிகழ்வு இடம்பெறும் இடம்வரை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். இதே

திய இசையுடனும் தீவர்த்திகளுடனும் நகர போராளிகள் பொதுமக்கள் என அனைவரும் ஊர்வலமாக வித்தியாலய மைதானத்தை அடைந்தனர்.

அங்கு 27 கரும்புலி வீரர்களின் உருவப் படங்களிற்கும் 27 தீவர்த்திகளினால ஒளியேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகமும் யாழ். மாவட்ட விசேட தளபதி செல்வராசாவும் ஏற்றி வைத்தனர்.

27 கரும்புலி வீரர்களின் உருவப் படங்களுக்கு போராளிகள் மலர்மாலை அணிவித்தனர்.

மௌன அஞ்சலியைத் தொடர்ந்து ''புலிகளின் தாகம் தமிழீழ'' என்ற பாடல் போராளிகளினால் பாடப்பட அதனை மக்களும் பாடினர். இதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் ஆரம்பமாகியது. (பா)

யாதைகளுடன் அவரது நினைவுக்கல் நாட்டப்படும்.

### கரும்புலிகள்

பிற்பகல் 3.30மணியளவில் காவல்துறைப் பணிமனையில் இருந்து துணைப்படை அணியினர் 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன் பெருந்திரளான மக்கள் ஊர்வலமாகப் புதுக்குடியிருப்புச் சந்தியைச் சென்றடைந்தனர், அங்கு கரும்புலிகளின் நினைவாக அமைக்கப்பட்ட உருவப்படங்கள் திறந்து வைக்கப்பட்டன. அத்தோடு பூநகரி வெற்றிக்குச் செயற்பட்ட 13 கரும்புலிகளின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுக்கல் திறந்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

### அதிகரித்த

பன அதிகரித்து வருகின்றன. இது குறித்து கருத்துத் தெரிவித்த பேராசிரியர் சரத் பண்டார அதிகமான விவசாயிகள் நூறுவீதம் பூச்சிகளற்ற பயிரையே விரும்புகின்றனர். ஆனால் இது இயற்கையான சூழல் அல்ல என தெரிவித்தார்.

கொடை என்றால் ஒருவன் ஓர் உன்னத இலட்சியத்திற்காக உயர் நோக்கிற்காக தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கும் ஒரு செயற்பாடே தற்கொடை இதை அவருக்கு விளக்கினேன்- ஆனால் அதை அவர் புரிந்து கொண்டதாக தெரியவில்லை- அவர் சொன்னார் மற்றைய விடுதலைப் போராட்டங்களில் ஜப்பானிலும் இப்படியான படைகள் இருந்துள்ளன அது போன்றே உங்கள் படையும் என்றார் அவருக்கு மேலும் விளக்கம் கொடுக்க வேண்டியிருந்தது

ஜப்பானில் இருந்த தற்கொலைப்படை இரண்டாம் உலக யுத்தத்தில் விமானத்திலிருந்து குண்டுகளை தாங்கிய வண்ணம் பிரித்தானிய கப்பல்கள் மீது பாய்ந்தனர் ஜப்பான் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது அந்த யுத்தத்தில் சில காரியங்களை செய்யலாம் ஆனால் ஒரு மக்களின் விடுதலைக்காக மக்கள் விமோசனத்திற்காக தன்னை அர்ப்பணிக்கும் தியாகமே உண்மையான தற்கொடை இப்படியாக பார்க்கப்போனால் விடுதலைப்புலிகளின் முதல் கரும்புலி தாக்குதலான மில்லரின் தாக்குதல் முதலாம் கட்ட ஈழப் போருக்கு ஒரு முடிவை கொண்டு வந்தது- சிங்களப் படை மன உறுதி உடைந்தது- எதிரியின் முதுகெலும்பை முறித்து பெரும் சாதனைகள் புரிய உழைத்தவர்கள் கரும்புலிகள்-

இரண்டாம் கட்ட ஈழப் போரில் யாழ். குடாநாட்டை சிங்களப் படைகள் முற்றுகைக்குள் கொண்டுவர எடுத்த முயற்சியை முறியடித்தவர்கள் கடற் கரும்புலிகள்- கிளாலி நீரேரியை மக்களுக்காக திறந்து விட்ட சாதனையை கரும்புலிகள் நிகழ்த்தினர்-

தேர்தல் வரப்போகின்றது

என்றுசொல்லி சபாநாயகரை மறித்து விட்டார்.

தலைவர் கூட ஒரு தடவை அங்கிலிசகன் ஆயரைச் சந்தித்து புலிகள் இயக்கம் சமாதானத்தை விரும்புவதாகக் கூறினார். இதற்கு மிஞ்சி நாம் என்ன செய்ய முடியும்.

சிங்களவனோ சமாதானம் வேண்டாம் என்றுநிற்கிறான். நாம் என்ன செய்ய முடியும்? சமீபத்தில் தொண்டமான் தலைவருக்கு ஒரு கடிதம் போட்டார். தான் வருகிறேன் என்று. இவர்தான் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப் உடன் சேர்ந்து ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரித்திருக்கிறாராம். அந்தத் தீர்வுத் திட்டத்தை அரசாங்கத்திடம் கையளித்து விட்டு அந்தத் தீர்வுத் திட்டத்தை எங்களுக்கும் அனுப்பி விட்டு எம்முடன் தான் வந்து கதைக்கப் போவதாக அக்கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

அந்த தீர்வு திட்டத்தில் பெரிசாக ஒன்றுமில்லை வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு மாநிலசபை அதற்கான அதிகாரங்கள் எதுவும் அந்த தீர்வத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை, மத்திய அரசிற்கும் இந்த மாநில சபைக்கும் மத்தியிலான அரசியல் பரவலாக்கம் எதுவும் தெளிவாக வரையப்படவில்லை.

இந்தத் திட்டத்தின்படி வடகிழக்கு மாகாணத்தில் உள்ள சில முஸ்லிம் பிரதேசங்களுக்கு ஒரு சுயாட்சி அதிகாரங்களுடன், அவர்களுக்கான பிராந்திய சபைகள் ஒன்றும் ஓர் திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வளவுதான். வேறு விபரம் எதுவும் எழுதப்படவில்லை,

அப்படியான ஓர் திட்டத்தை இங்கு அனுப்பி விட்டு தான் இங்கு உடனை வர வேண்டும். தலைவர் பிரபாகரனுடன் பேசவேண்டும். இந்த திட்டத்திற்கு ஒப்புதல் பெற வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்-

இல்லாது.

ஐலன்ட் பத்திரிகையில் ஓர் செய்தி வந்திருக்கிறது- விடுதலைப் புலிகள் இயக்கம் ஓர் மூன்றாவது நபர் மூலம் அரசுடன் இரகசிய பேச்சுக்களை நடத்திக் கொண்டு இருக்கிறது என்று நாம் அப்படிஒருவருடனும்பேச்சுநடத்தவில்லை அப்படி நடத்துகிற நோக்கமும் இல்லை

எம்மை பொறுத்த வரையில் தேர்தலுக்கு முன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவே கூடாது. ஏனெனில் அடுத்த அரசாங்கம் எதுவென்றே தெரியாது- இந் நிலையில் தேர்தல் இலாபத்திற்காக அரசியல் இலாபம் தேடும் சக்திகளுடன் நாம் பேச தயாராக இல்லை-

இது சிங்கள பாராளுமன்றம் சிங்கள பெரும்பான்மை இனத்தின் அதிகாரப் பீடம் இனவாதத்தின் ஆட்சி பீடம் காலம் காலமாக இந்த பாராளுமன்றத்தில் எங்கள் பிரதிநிதிகள் எனக் கூறி இந்த கதிரைகளில் உட்கார்ந்தவர்கள் தமிழ் மக்களுக்கு என்னத்தை செய்தார்கள்? இதன் மூலம் தானே தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டது எமக்குத் தெரியாதா?

அப்போ எங்கள் பிரதிநிதிகள் எங்கே இருந்தார்கள் அவர்களும் அந்த பாராளுமன்றத்தில் தானே இருந்தார்கள் சிறிலங்கா பாராளுமன்றம் தமிழர் பிரச்சினைகளை தீர்க்கத் தவறிவிட்டது- அதனால் தீர்க்கமுடியாது- ஏனெனில் இந்த பாராளுமன்ற அமைப்பு பெரும்பான்மையினரின் ஆட்சிப் பீடமாகவும் இனவாதத்தின் இருப்பிடமாகவுமுளது-

இப்படிப்பட்ட சிங்களவரின் பாராளுமன்ற கதிரையில் குந்தியிருந்து யாழ்ப்பாணத்தில் ஆட்சி நடத்த வேண்டிய அவசியம் எமக்கு இல்லை- ஏனெனில் இந்த மண்ணில் நாம் எமது ஆட்சியை நடத்துகிறோம் நாம் ஓர் கட்சியல்ல

இங்கு பத்திரிகையாளர் வந்தபோது அரசியல் பற்றி எம்முடன் பேசவில்லை எமது ஆட்சி அமைப்பு நிர்வாக ஒழுங்கு எப்படி நடக்கிறது என்பதை நேரில் பார்க்கவே வந்தோம் எனக் கூறினர் இன்றைய மேற்குலகம் எம்முடைய ஆட்சியமைப்பை பற்றியே பார்த்துக்கொண்டிருப்பதாக கூறினார்கள்

புலிகளின் யுகம் வித்தியாசமானது- எமது ஆட்சி அதிகாரங்களை உரிமைகளை நாங்களே வென்றெடுத்து சுதந்திர மனிதர்களாக நாமே மாறி வருகிறோம்-மக்கள்யுத்தத்தை பற்றியோ, துன்பங்களை பற்றியோ கவலை கொள்ள வேண்டாம்-

சமாதான பேச்சுவார்த்தைக்கு நாம் தயார் ஆனால் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல் முடிந்த பின்புதான் பேசுவோம்- நடக்கும் தேர்தலின் முடிவை பார்ப்போம்- சில வேளை ஓர் புதிய ஆட்சி வரலாம்- முற்போக்கான ஓர் ஆட்சி வரலாம்- யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்து புலிகளுடன் பேசக் கூடிய புதிய சக்தி வந்தால் நாமும் பேச தயார் நாம் சமாதான கதவுகளை மூடப்போவதில்லை ஆனால் எம்முடன் பேசாது இந்தப் பிரச்சினையை நீடித்துச் சென்று யுத்தத்தைத் தொடருவோம் என்று எந்தவொரு புதிய அரசாங்கமும் நினைக்குமானால் அவர்கள் பெரியதொரு வரலாற்று தவறையே இழைத்தவர்களாவர்

தர்மம், நீதி. நியாயம் யார் பக்கம் உள்ளதோ அந்தப்பக்கமே நிச்சயம் வெற்றி பெறும் ஆகவே எமது தலைவரின்வழி நடத்தலின் கீழ் பொது மக்களுக்கு நிரந்தர விடிவு வரும் அதற்கான பல வழிகளில் எமது போராட்டத்தை வழி நடத்தி செல்கிறோம்என்றார்

## மரண அறிவித்தல்

### திரு. அன்ரனி பிரான்சிஸ் சேவியர்

அடப்பன் வீதியை பிறப்பிடமாகவும், பாஷையூரில் வசித்தவரும் பப்பா என அன்பாக அழைக்கப்படும் அன்ரனி பிரான்சிஸ் சேவியர் (Retired Tally clerk - K. K. S. Harbour) அவர்கள் 04 - 07 - 94 அன்று காலமாகிவிட்டார்.

இவர் றோசலீனின் அன்புக் கணவரும், அன்ரன் புஸ்பராஜாவின் (ராஜன்) (FRANCE) அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

781, கடற்கரை வீதி,
பாசையூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி சியாபளா ஞானசீலன்
(பெறாமகள்)

(8729)

யாழ் ஸ்ரீதரில்
STEVENSPIEL BERG
இயக்கிய
JURASSIC PARK
(அறிவியல் சார்ந்த திகில் படம்)
தினசரி 6.00
சனி, ஞாயிறு
10.30, 6.00மணி
(சி - 9872

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம்திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.